Project Madurai
மதுரை தமிழ் இலக்கிய
மின்தொகுப்புத் திட்டம்

# பரஞ்சோதி முனிவர் அருளிய
# திருவிளையாடற் புராணம்
# (திருவாலவாய் மான்மியம்)
# இரண்டாவது - கூடற் காண்டம் - பாகம் 2 (படலம் 35-42)

**tiruviLaiyATaR purANam**
**of paranjcOti munivar - canto 2, part 2**
**In tamil script, unicode/utf-8 format**

**Acknowledgements:**
Our Sincere thanks go to the Ms. Kalaivani Ganesan of Singapore for her help in the preparation of this etext for Saivam.org and Mr. S. Ganesan for providing an electronic version of this work for inclusion as part of Project Madurai collections.
Preparation of HTML and PDF versions: Dr. K. Kalyanasundaram, Lausanne, Switzerland.

**© Project Madurai, 1998-2014.**
Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to the Preparation of electronic texts of tamil literary works and to distribute them free on the Internet.
Details of Project Madurai are available at the website
http://www.projectmadurai.org/
You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

# பரஞ்சோதி முனிவர் அருளிய
# திருவிளையாடற் புராணம்
# (திருவாலவாய் மான்மியம்)
# இரண்டாவது - கூடற் காண்டம் - பாகம் 2 (படலம் 35-42)

## உள்ளடக்கம்

**இரண்டாவது - கூடற் காண்டம்**

(தண்ணீர்ப் பந்தர் வைத்த படலம் முதல் நாரைக்கு முத்தி கொடுத்த படலம் வரை)


19. நான்மாடக் கூடலான படலம் (1307- 1332)
20. எல்லாம் வல்ல சித்தரான திருவிளையாடற் படலம் (1333- 1356)
21. கல்லானைக்குக் கரும்பருத்திய படலம் (1357- 1385)
22. யானை எய்த படலம் (1386 - 1427)
23. விருத்த குமார பாலரான படலம் சுபம் (1428 - 1460)
24. கால் மாறி ஆடின படலம் (1461-1489 )
25. பழி அஞ்சின படலம் (1490 - 1533)
26. மாபாதகம் தீர்த்த படலம் (1534 - 1574)
27. அங்கம் வெட்டின படலம் (1575 - 1602)
28. நாகமெய்த படலம் (1603 - 1625 )
29. மாயப் பசுவை வதைத்த படலம் (1626 - 1663 )
30. மெய்க் காட்டிட்ட படலம் (1664 - 1704)
31. உலவாக்கிழி அருளிய படலம் (1705 - 1723 )
32. வளையல் விற்ற படலம் (1724 - 1759)
33. அட்டமா சித்தி உபதேசித்த படலம் (1760 -1788 )
34. விடை இலச்சினை இட்ட படலம் (1789 -1818 )
35. தண்ணீர்ப் பந்தர் வைத்த படலம் (1819 -1855 )
36. இரச வாதம் செய்த படலம் (1856 -1885 )
37. சோழனை மடுவில் வீட்டிய படலம் (1886 -1907 )
38. உலவாக்கோட்டை அருளிய படலம் (1908 -1925 )
39. மாமனாக வந்து வழக்கு உரைத்த படலம் (1926 - 1962 )
40. வரகுணனுக்குச் சிவலோகம் காட்டிய படலம் (1963 -2030 )
41. விறகு விற்ற படலம் (2031 -2100 )
42. திருமுகம் கொடுத்த படலம் (2101 - 2130 )
43. பலகை இட்ட படலம் (2131 -2148 )
44. இசைவாது வென்ற படலம் (2149 - 2192)
45. பன்றிக் குட்டிக்கு முலை கொடுத்த படலம் (2193- 2255 )
46. பன்றிக் குட்டிகளை மந்திரிகளாக்கிய படலம் (2256 -2273 )
47. கரிக் குருவிக்கு உபதேசம் செய்த படலம் (2274 -2296 )
48. நாரைக்கு முத்தி கொடுத்த படலம் (2297 - 2321 )


--------------------

## 35. தண்ணீர்ப் பந்தர் வைத்த படலம் (1819 - 1855)

1819 சம்பு மதுரைப் பரன் இரவு தனியே வந்து தனைப பணிந்த
வெம்பு கதிரோன் மருமானை விடுத்து மீண்டும் தாழ இறுக்கி
அம் பொன் கதவின் விடை பொறித்தது அறைந்தும் தென்னன் அடு படைக்கு
வம்பு மலர் தோய் புனல் பந்தர் வைத்துக் காத்த வகை சொல்வாம். 1

1820 தென்னன் அரச புரந்தரன் கோல் செலுத்த நாளில் காடு எறிந்த
மன்னன் பின்னர் வெளிப்படையாப் போந்து போந்து மது ரேசன்
பொன் அம் கமலத் தாள் வணங்கிப் போவான் முன்னிப் பொரும் பொருனைக்
கன்னி நாடன் கேண்மை பெற விடுத்தான் வரிசைக் கையுறையே. 2

1821 பொன்னி நாடன் வர விடுத்த பொலம் பூண் ஆடை முதல் பிறவும்
கன்னி நாடன் கை கவர்ந்து தானும் கலக்கும் தொடர் பினால்
உன்னி வேறு கையுறையாய்த் துறவு செய்ய உவப்பு எய்திச்
சென்னி காதல் மகல் கொடுப்பான் இசைந்தான் அந்தச் செழியற்கு. 4

1822 செழியன் தனக்கு வரையறுத்த செய்தி கேட்டுச் செம்பியர் கோன்
கழி அன்புடை குலமகளைத் தான் போய்க் கொள்வான் கருதிமதி
வழிவந்தவற்குத் தம்பி என வந்த அரச சிங்கம் எனும்
பழி அஞ்சாதான் வஞ்சித்துப் பழனக் காஞ்சிப் பதி புகுவான். 5

1823 காஞ்சிப் பதிமுன் குறுகும் இளம் காவலோனைக்
கடல் சேனை
தாம் சுற்றிய வந்து எதிர் கொடு போய்த் தன் முன்
தனக்கு என்று இருந்த மகள்
ஆம் சிற்றிடையை மணம் புணர்த்தி அந்த மருகற்கு
அரசு நிலை
வாஞ்சித்து அரச புரந்தரனைப் பிடிக்க
மதித்தான் வனம் எறிந்தான். 6

1824 மருமகன் தன்னுடன் எழுந்து மாமனான வளவர் கோன்
பொரும் அகன்ற சேனை யானை புடை நெருங்க மதி வழித்
திரு மகன் தன் மேல் அமர்த் திறம் குறித்து முரசு அறைந்து
உரும் அகன்ற பல்லியம் ஒலிப்ப வந்துளான் அரோ. 7

1825 திரண்டு அதிர்ந்து எழுந்து வந்த சென்னி சேனை தன் நகர்க்
இரண்டு யோசனைப் புறத்து இறுக்கும் முன்னர் ஒற்றரால்
தெருண்டு தென்னனை மாட நீ கூடல் மேய சிவன் தாள்
சரண் புகுந்து வேண்டுக என்று சார்ந்து தாழ்ந்து கூறுவான். 8

1826 அன்று பாதி இரவில் வந்து அடி பணிந்து தமியனாய்ச்
சென்ற சென்னி என்னும் நின்ன திருவடிக் கண் அன்பினான்
இன்றும் அந் நிலையனாய் எனக்கு வேண்டுவன விடுத்து

ஒன்று கேண்மை புரிகுவான் உளத்தில் ஒன்றை உன்னினான். 9

1827 அறத்தினுக்கு உள்ளாகி அன்று நின்ற நீ அவன் செயும்
மறத்தினுக்கு உள்ளாகி இன்று வன்மை செய்வதே அறப்
புறத்தினார் புரம் பொடித்த புண்ணியா எனக் கரைந்து
உறைத்து வேண்டினான் வேலை உம்பர் நாதன் அருளினால். 10

1828 மெய் துறந்த வாய்மை ஒன்று விண்ணின் நின்று அண்ணலே
ஐது நுங்கள் சேனையேனும் மாகவத்து நாளைநீ
எய்தி வந்த தெவ்வரோடு எதிர்ந்து உருத்து நின்று போர்
செய்தி வென்றி நின்னது ஆல் செய்தும் என்று எழுந்தது ஆல். 11

1829 காய வாணி செவி நுழைந்த காலை வேந்தர் இந்திரன்
நாயனார் அடிக்கணே நயந்த அன்பு முவகையும்
ஆய வேலை வீழ்ந்து தாழ்ந்து அகன்று தன் இருக்கை போய்
மேயினான் நிமிர்ந்த கங்குல் விடியும் எல்லை நோக்குவாள். 12

1830 கழிந்த கங்குல் இற விசும்பு கண் விழிக்கும் முன்னரே
விழித்து எழுந்து சந்தி ஆதி வினை முடித்து வானநீர்
சுழித்து அலம்பு வேணி அண்ணல் தூய பூசை செய்து எழீ இத்
தெழித்து எழுந்த சேனை யோடு செரு நிலத்தை நண்ணினான். 13

1831 அலை சிறந்த சலதி மீது ஒரு ஆறு செல்லு மாறு போல்
மலைசிறந்த நேரி வெற்பன் மள்ளர் சேனை வெள்ள மேல்
கலை சிறந்த மதி நிறைந்த கன்னி நாடு காவலன்
சிலை சிறந்த சிறிய சேனை சென்று அலைத்து நின்றதே. 14

1832 உருமு அன்ன குரலினார் உலவை அன்ன செலவினார்
வெருவுதீயின் வெகுளியார் வெடித்த வீர நகையினார்
செரு வின் மான அணியினார் சினஇ மடித்த வாயினார்
இருவர் சேனை மள்ளரும் எதிர்ந்து கை கலந்தனர். 15

1833 மன்றல் அம் தெரியல் நேரி மலையவன் தமர்க்கு எலாம்
தென்றல் அம் பொருப்பினான் திரண்டநான்கு கருவியும்
மின் தயங்கு செய்ய வேணி விடையவன் தன் அருளினால்
ஒன்று அனந்தம் ஆக வந்து உருத்து எதிர்ந்து தோன்றும் ஆல். 16

1834 தேரின் ஓதை கந்துகம் சிரிக்கும் ஓதை சொரிமதக்
காரின் ஓதை பேரியம் கறங்கும் ஓதை மறவர் தம்
போரின் ஒதை வீரர்தோள் புடைக்கும் ஒதை யோடு முந்
நீர் ஓதை ஒன்று எனக் கலந்து ஒடுங்கி நின்றதே. 17

1835 சிலை பயின்ற வீரரோடு சிலை பயின்ற வீரரே
கலை பயின்ற வாளரோடு கலை பயின்ற வாளரே

கொலை பயின்ற வேல ரோடு கொலை பயின்ற வேலரே
மலை பயின்ற மல்லரோடு மலை பயின்ற மல்லரே. 18

1836 கரி உகைத்த பாகரோடு கரி உகைத்த பாகரே
பரி உகைத்த மறவரோடு பகை உகைத்த மறவரே
கிரி உகைத்த வலவரோடு கிரி உகைத்த வலவரே
எரி உகைத்து எதிர்ந்த கால் எனக் கலந்து மலை வரால். 19

1837 விடுக்கும் வாளி எதிர் பிழைப்பர் வெய்ய வாளி எய்து பின்
தொடுக்கும் வாளி வில் லொடும் துணிப்பர் பின் கணிப்பு அற
மடுக்கும் வாளி மார் புதைப்ப வாங்கி மற்று அவ் வாளி கொண்டு
அடுக்கும் ஏவலரை எய்து அடர்ப்பர் கிள்ளி மள்ளரே. 20

1838 சோனை மாரியில் சரம் சொரிந்து நின்று துள்ளுவார்
ஆன வாளி எதிர் பிழைத்து ஒதுங்கி நின்று அழல் சரம்
கூனல் வாளி சிலை இறத் தொடுத்து எறிந்து கூவுவார்
மீன கேதனத்து வேந்தன் வீரர் சென்னி வீரர் மேல். 21

1839 தறிந்த தாள் தகர்ந்த சென்னி தரை உருண்ட வரை எனச்
செறிந்த தோள் சரிந்த தேர் சிதைந்த பல் படைக்கலம்
முறிந்த யானை கையிறா முழங்கி வீழ்ந்த செம்புனல்
பறிந்த பாரு பார் இடங்கள் பைத்த கூளி மொய்த்தவே. 22

1840 மடலின் நீடு தார் அலங்கன் மன்னர் சேனை இன்னவாறு
உடலின் நீழல் அடி அகத்து ஒடுங்க உம்பர் உச்சியில்
கடலின் நீடு கதிர் பரப்பு கடவுள் எய்தும் அளவு நின்று
அடலின் நீடி இடைவிடாமல் அமர் உழந்ததால் அரோ. 23

1841 அந்தம் நாள் அனைத்தையும் அழிக்க நின்ற அரன் நுதல்
சிந்தும் தீ எனக் கனன்று உருத்து நின்று தெறுதலால்
எந்த ஆறும் அற வறப்ப இம்பர் அன்றி உம்பரும்
வெந்து வான ஆறும் வற்ற வேனில் வந்து இறுத்ததால். 24

1842 மண் பிளந்து பிலம் நுழைந்து வரை பிளந்து நிரைய வாய்
எண் பிளந்து நின்ற பொங்கர் இலை உகப் பிளந்து மேல்
விண் பிளந்து பரிதி நீடு வெம் கரங்கள் யாரையும்
கண் பிளந்து அழன்று வீசு கானல் எங்கும் ஆனதே. 25

1843 ஆயிடை அலகைத் தேரும் அடைந்தவர் வெயர்வும் அன்றித்
தூய நீர் வறந்த அந்தச் சுடுபுலம் தோய்ந்த காலும்
மீ உயர் மதி நிலவும் வெய்ய வாய்ச் சுடு நல் லோரும்
தீயவர் தம்மைச் சேர்ந்தால் தீயவர் ஆவர் அன்றோ. 26

1844 விளை மத ஊற்று மாறி வெகுளியும் செருக்கும் மாறித்
துளை உடைக் கைமான் தூங்கு நடைய வாய்ச் சாம்பிச் சோர்ந்த
உளர் தரு ஊழிக் காலினோடும் ஆம் புரவி எய்த்துத்
தளர் நடை உடைய வாகித் தைவரும் தென்றல் போன்ற. 27

1845 கானல் அம் தேர் மேல் சூறைக் கால் எனும் பாகன் தூண்ட
வேனில் வேந்து ஏறிச் சீறி வெப்பம் ஆம் படைகள் வீச
மாநிலம் காவல் பூண்ட மன்னவர் இருவர் தங்கள்
தானையும் உடைந்து தண்ணீர் நசை சுடச் சாம்பிற்று அன்றே. 28

1846 இரக்கம் இல் கொடிய செல்வர் மருங்கு போய் இரப்பார் போல
உருப்பம் மொண்டு இறைக்கும் கள்ளி நீழல் புக்கு ஒதுங்குவாரும்
தருக்கு அற நிரப்பால் எய்த்தோர் தம்மினும் வறியர் பால் சென்று
இரப்ப போல் இலை தீந்து துக்க மரநிழல் எய்துவாரும். 29

1847 கொல் இபம் பரி மான் தேரின் குறு நிழல் ஒதுங்கு வாரும்
அல் இருள் வட்டத் தோல் வெண் கவிகையுள் அடங்கு வாரும்
செல் இடம் பிறிது காணார் வீரவான் சென்றோர் நின்ற
கல்லுடன் நிழல் சேர்வாரும் ஆயினார் களமர் எல்லாம். 30

1848 ஆயது ஓர் அமையம் தன்னில் அளவு இலா உயிர்க்கும் ஈன்ற
தாயனார் துலை போல் யார்க்கும் சமநிலை ஆய கூடல்
நாயனார் செழியன் தானை நனந்தலை வேத நாற்கால்
பாயதோர் தண்ணீர்ப் பந்தர் பரப்பி அப் பந்தர நாப்பண். 31

1849 புண்டர நுதலும் காதின் புறத்து அணி மலரும் பாத
முண்டக மலர் மேல் ஒற்றைக் கிண் கிணி முழக்கும் கச்சியாப்பு
உண்ட தோல் உடையும் கண்டோர் உள்ளமும கண்ணும் கொள்ளை
கொண்ட புன்னகையும் உள்ளக் கருணையின் குறிப்பும தோன்ற. 32

1850 அரு மறை அகத்து நின்றாங்கு அருந்தவர் ஆகி வேணிப்
பொரு புனல் பூரித்து ஆங்கு ஓர் புண்ணியச் சிரகம் தாங்கி
ஒருவருக்கு ஒன்றெ ஆகி இலக்கருக்கு இலக்கம் ஆகித்
அருகுறும் புழையால் வாக்கித் தணித்தனர் தண்ணீர்த் தாகம். 33

1851 சுந்தரப் புத்தேள் வைத்த துறு மலர் வாசத் தெண்ணீர்ப்
பந்தர் புக்கு அடைந்து நன்னீர் பருகி எய்ப்பு அகல ஆற்றல்
வந்தபின் செழியன் தன்னோர் வளவன் மேல் ஏறிச்சீறி
அந்தம் இல் அனிகம் சிந்தித் தும்பை வேய்ந்து அடு போர் செய்தார். 34

1852 கடல் உடைத்து என்னப் பொன்னி காவலன் தானை சாய
மடல் உடை வாகை வேய்ந்து வளவனை மருக னோடும்
மிடல் உடைத் தறுகண் சேனை வீரர் வெம் கையால் பற்றி

அடல் உடைக் கன்னி நாடர்க் அரசன் முன் கொண்டு போந்தார். 35

1853 கொடுவந்த வளவன் தன்னைக் கோப் பெரும் செழியர் கோமான்
வடுவந்த தம்பி யோடு மாட நீள் கூடன் மேய
கடு வந்த மிடற்றார் முன்போய் விடுத்து எந்தை கருதியது யாது என்ன
நடுவந்த நிலையான் கேட்ப நாயகன் இகழ்த்து மன்னோ. 36

1854 அறவன் நீ அல்லையோ உன் அகத்தினுக்கு இசைந்த செய்கென
இறைவனது அருளால் வானின் எழுமொழி கேட்டு வைகைத்
துறைவனும் அறத்தின் ஆற்றால் சோழனைச் சிலமால் யானை
மற வயப் பரிபூண் மற்றும் வழங்கினான் விடுத்தான் பின்னர். 37

1855 வள்ளல் தன் தம்பி என்னும் மன்னவர் சிங்கம் தன்னைத்
தள்ளரும் தறுகண் ஆண்மைத் தருக்கு அறத்து ஆனாள் செல்வம்
உள்ளன சிறிது மாற்றி ஒதுக்கி எவ் உயிர்க்கும் தாயாய்ப்
பள்ள நீர் அகலம் காத்து பல்வளம் பழுக்க வாழ்ந்தான். 38

தண்ணீர்ப் பந்தர் வைத்த படலம் சுபம் ------
---------------- 36.

## 36. இரச வாதம் செய்த படலம் (1856 -1885 )

1856 வரதன் மீனவன் படை இடை வந்து நீர்ப் பந்தர்
விரதன் ஆகி நீர் அருந்திய வினை செய்ததும்
பரத நூலியன் நாடகப் பாவையாள் ஒருத்திக்
இரத வாதம் செய்து அருளிய ஆடலை இசைப்பாம். 1

1857 பரும் கை மால்வரைப் பூமியன் பைந்தமிழ் நாட்டின்
இரங்கு தெண் திரைக் கரங்களால் ஈர்ம் புனல் வைகை
மருங்கில் நந்தனம் மலர்ந்த பன் மலர் தூ உய்ப் பணியப்
புரம் கடந்தவன் இருப்பது பூவண நகரம். 2

1858 எண்ணில் அங்கு உறை சராசரம் இலிங்கம் என்று எண்ணி
விண்ணின் நால்களும் கோள்களும் விலங்குவது யாக்கைக்
கண்ணினான் கதிர் முதல் பல கடவுளர் பூசை
பண்ணி வேண்டிய நல்வரம் அடைந்தது அப்பதியில். 3

1859 கிளிஉளார் பொழில் பூவணக் கிழவர் தம் கோயில்
தளி உளார் தவப் பேறு எனா அடாது கு பூந்தார்
அளி உளார் குழல் அணங்கு அனாள் அந்தரத்தவர்க்கும்
களி உளார் தர மயக்கு உறூம் கடல் அமுது அனையாள். 4

1860 நரம்பின் ஏழ் இசை யாழ் இசைப் பாடலும் நடநூல்
நிரம்பும் ஆடலும் பெண்ணல நீர்மையும் பிறவும்

அரம்பை மாதரை ஒத்தனள் அறநெறி ஒழுகும்
வரம்பினால் அவர் தமக்கு மேல் ஆயினாள் மன்னோ. 5

1861 ஆய மாதர் பேர் பொன் அனையாள் என்பவள் தன்
நேய ஆய மோடு இரவின் இருள் நீங்கு முன் எழுந்து
தூய நீர் குடைந்து உயிர் புரை சுடர் மதிக் கண்ணி
நாயனார் அடி அருச்சனை நியமும் நடாத்தி. 6

1862 திருத்தர் பூவண வாணரைச் சேவித்துச் சுத்த
நிருத்தம் ஆடி வந்து அடியரைப் பொருள் என நினையும்
கருத்தளாய் அருச்சித்து அவர் களிப்ப இன் சுவை ஊண்
அருத்தி எஞ்சியது அருந்துவாள் அஃது அவள் நியமம். 7

1863 மாதர் இந் நெறி வழங்கும் நாள் மற்று அவள் அன்பை
பூதலத்து இடைத் தெருட்டு வான் பொன் மலை வல்லி
காதல் நாயகன் திரு உருக் காணிய உள்ளத்து
ஆதரம் கொடுத்து அருளினார் பூவணத்து ஐயர். 8

1864 ஐயர் தந்த பேர் அன்பு உரு ஆயினாள் மழுமான்
கையர் தன் திரு உருவினைக் கருவினால் கண்டு
மைய கண்ணினாள் வைகலும் வரு பொருள் எல்லாம்
பொய் இல் அன்பு கொண்டு அன்பர்தம் பூசையின் நேர் வாள். 9

1865 அடியர் பூசனைக்கு அன்றி எஞ்சாமையால் அடிகள்
வடிவு காண்பது எப்படி என்று மடி இலாச் செழியற்கு
கொடிவில் பொன் கிழி நல்கிய வள்ளலை உன்னிப்
பிடி அனாள் இருந்தாள் அஃது அறிந்தனன் பெருமான். 10

1866 துய்ய நீறு அணி மெய்யினர் கட்டங்கம் தொட்ட
கையர் யோகப் பட்டத்து இடைக் கட்டினர் பூதிப்
பையர் கோவணம் மிசை அசை உடையினர் பவளச்
செய்ய வேணியர் அங்கு ஒரு சித்தராய் வருவார். 11

1867 வந்து பொன் அனையாள் மணி மாளிகை குறுகி
அந்தம் இன்றி வந்து அமுது செய்வா ரொடும் அணுகிச்
சிந்தை வேறு கொண்டு அடைந்தவர் திருவமுது அருந்தாது
உந்து மாளிகைப் புறம் கடை ஒரு சிறை இருந்தார். 12

1868 அமுது செய் அரும் தவர் எலாம் அகல வேறு இருந்த
அமுத வாரியை அடிபணிந்து அடிச்சியர் ஐய
அமுது செய்வதற்கு உள் எழுந்து அருள்க என உங்கள்
அமுது அனாளை இங்கு அழை மின் என்று அருளலும் அனையார். 13

1869 முத்தரா முகிழ் வாள் நகை அல்குலாய் முக்கண்
அத்தவர் ஆனவர் தமர் எலாம் அமுது செய்து அகன்றார்
சித்தராய் ஒருதம் பிரான் சிறு நகையின ராய்
இத் தரா தலத்து யார் இருக்கின்றார் என்றார். 14

1870 நவ மணிக் கலன் பூத்த பூம் கெம்பரின் நடந்து
துவர் இதழ்க் கணி வாயினாள் சுவா கதம் அங்கு இல என்று
உவமை அற்றவர்க்கு அருக்கிய ஆசனம் உதவிப்
பவம் அகற்றிய வடிமலர் முடிஉறப் பணிந்தாள். 15

1871 எத்தவம் செய்தேன் இங்கு எழுந்து அருளுதற்கு என்னாச்
சித்தர் மேனியும் படி எழில் செல்வமும் நோக்கி
முத்த வாள் நகை அரும்ப நின்று அஞ்சலி முகிழ்ப்ப
அத்தர் நோக்கினார் அருள் கணார் அருள் வலைப் பட்டாள். 16

1872 ஐய உள் எழுந்து அருளுக அடிகள் நீர் அடியேன்
உய்ய வேண்டிய பணி திரு உளத்தினுக்கு இசையச்
செய்ய வல்லன் என்று அஞ்சலி செய்ய உள் நகையா
மையள் நோக்கியை நோக்கி மீன் நோக்கிதன் மணாளன். 17

1873 வடியை நேர் விழியாய் பெருவனப் பினை சிறிது உன்
கொடியை நேரிடை என விளைத்தனை எனக் கொன்றை
முடியினான் அடி ஆரம் மென் முகிழ் முலைக் கொடி தாழ்ந்து
அடிய னேற்கு வேறாய் ஒரு மெலிவு இலை ஐயா. 18

1874 எங்கள் நாயகர் திரு உருக் காண்பதற்கு இதயம்
தங்கும் ஆசையால் கரு உருச் சமைத்தனன் முடிப் பேற்கு
இங்கு நாள் தொறும் என் கையில் வரும் பொருள் எல்லாம்
உங்கள் பூசைக்கே அல்லதை ஒழிந்தில என்றாள். 19

1875 அருந்து நல் அமுது அனையாள் அன்பு தித்திக்கத்
திருந்து தேன் என இரங்கு சொல் செவி மடுத்து ஐயர்
முருந்து மூரலாய் செல்வ மெய் இளமை நீர் மொக்குள்
இருந்த எல்லையும் நிலை சில என்பது துணிந்தாய். 20

1876 அதிக நல் அறம் நிற்பது என்று அறிந்தனை அறத்துள்
அதிகம் ஆம் சிவ புண்ணியம் சிவ அர்ச்சனை அவற்றுள்
அதிகம் ஆம் சிவ பூசையுள் அடியவர் பூசை
அதிகம் என்று அறிந்து அன்பரை அருச்சனை செய்வாய். 21

1877 உறுதி எய்தினை இருமையும் உன் பெயர்க்கு ஏற்ப
இறுதி இல்லவன் திரு உரு ஈகையால் காணப்
பெறுதியாக நின் மனைக் கிடை பித்தளை ஈயம்

அறுதியான பல் கலன்களும் கொணர்தி என்று அறைந்தார். 22

1878 ஈயம் செம்பு இரும்பிர சிதம் என்பவும் புணர்ப்பால்
தோயும் பித்தளை வெண்கலம் தரா முதல் தொடக்கத்து
ஆயும் பல் வகை உலோகமும் கல் என அலம்பத்
தேயும் சிற்றிடை கொண்டு போய்ச் சித்தர் முன் வைத்தாள். 23

1879 வைத்த வேறு வேறு உலோகமும் மழு உழை கரந்த
சித்த சாமிகள் நீற்றினைச் சிதறினர் பார்த்தே
இத்தை நீ இரா எரியில் இட்டு எடுக்கின் பொன் ஆம்
அத்தை நாயகன் திருஉக் கொள்க என அறைந்தார். 24

1880 மங்கை பாகரை மடந்தையும் இங்கு நீர் வதிந்து
கங்குல் வாய் அமுது அருந்தி இக் காரியம் முடித்துப்
பொங்கு கார் இருள் புலரும் முன் போம் எனப் புகன்றாள்
அம் கயல் கண் ஆள் தனைப் பிரியார் அதற்கு இசையார். 25

1881 சிறந்த மாட நீள் மதுரையில் சித்தர் யாம் என்று
மறைந்து போயினார் மறைந்த பின் சித்தராய் வந்தார்
அறைந்த வார் கழல் வலம்பிட வெள்ளி மன்று ஆடி
நிறைந்த பேர் ஒளியாய் உறை நிருத்தர் என்று அறிந்தாள். 26

1882 மறைந்து போயினார் எனச் சிறிது அயர்ச்சியும் மனத்தில்
நிறைந்த ஓர் பெரும் கவர்ச்சியை நீக்கினார் என்னச்
சிறந்து ஓர் பெரும் மகிழ்ச்சியும் உடைய வளாய்ச் சித்தர்
அறைந்தவாறு தீப் பெய் தனன் உலோகங்கள் அனைத்தும். 27

1883 அழல் அடைந்த பின் இருள் மல வலி திரிந்து அரன் தாள்
நிழல் அடைந்தவர் காட்சி போல் நீப்பரும் களங்கம்
கழல வாடகம் ஆனதால் அது கொண்டு கனிந்த
மழலை ஈர்ஞ் சொலாள் கண்டனள் வடிவு இலான் வடிவம். 28

1884 மழ விடை உடையான் மேனி வனப் பினை நோக்கி அச்சோ
அழகிய பிரானோ என்னா அள்ளி முத்தம் கொண்டு அன்பில்
பழகிய பரனை ஆனாப் பரிவினால் பதிட்டை செய்து
விழவு தேர் நடாத்திச் சில் நாள் கழிந்த பின் வீடு பெற்றாள். 29

1885 நையும் நுண் இடையினாள் அந் நாயகன் கபோலத்து இட்ட
கை உகிர்க் குறியும் சொன்ன காரணக் குறியும் கொண்டு
வெய்ய வெம் கதிர் கால் செம் பொன் மேனி வேறு ஆகி நாலாம்
பொய் உகத்தவருக்குத் தக்க பொருந்து உருவு ஆகி மன்னும். 30

இரச வாதம் செய்த படலம் சுபம் ------
-------------------------

## 37. சோழனை மடுவில் வீட்டிய படலம் (1886 - 1907)

1886 அழல் அடைந்த பின் இருள் மல வலி திரிந்து அரன் தாள்
நிழல் அடைந்தவர் காட்சி போல் நீப்பரும் களங்கம்
கழல வாடகம் ஆனதால் அது கொண்டு கனிந்த
மழலை ஈர்ஞ் சொலாள் கண்டனள் வடிவு இலான் வடிவம். 1

1887 பொன் நெடும் தேரி ராச புரந்தரன் புரந்தர் ஆதி
பல் நெடும் தேவர் ஏத்தப் பரன் உலகு அடைந்தான் இப்பால்
அந் நெடும் தகையோன் மைந்தன் அடல் இரா சேச என்பான்
இந் நெடும் தகையோன் மைந்தன் இராசகம் பீரன் என்போன். 2

1888 மற்று இவன் குமரன் பாண்டி வங்கிய தீபன் அன்னான்
பொன் திணி தடம் தோள் மைந்தன் புரந்தர சித்தாம் அன்னான்
வெற்றிகொள் குமரன் பாண்டி வங்கிய பதாகன் வீரம்
பற்றிய சுந்தரேச பாத சேகரன் அவன் சேய். 3

1889 பலர் புகழ் சுந்தரேச பாத சேகரன் ஆம் தென்னன்
அலை புனல் உடுத்த கூடல் அடிகளுக்கு அன்பன் ஆகிக்
கொலை புணர் வேலால் வெம் கோல் குறும்பு எனும் களைகள் தீர்த்து
மலர் தலை உலகம் என்னும் வான் பயிர் வளர்க்கும் நாளில். 4

1890 பத்துமான் தடம் தேர் நூறு பனைக்கை மா நூற்றுப் பத்துத்
தத்துமான் அயுத மள்ளர் தானை இவ் அளவே ஈட்டி
இத்துணைக்கு ஏற்ப நல்கி எஞ்சிய பொருள்கள் எல்லாம்
சித்து உரு ஆன கூடல் சிவனுக்கே செலுத்தும் மன்னோ. 5

1891 கண்டிகை மகுடம் ஆதிக் கலன் நிரை குயின்றும் திங்கள்
மண்டலம் மிடறும் சென்னிக் கோபுர மாடம் ஆதி
எண் திசை இருள் கால் சீப்ப எரி மணி இழைத்து வேய்ந்தும்
திண் திறல் உடையான் இன்ன திருப்பணி பிறவும் செய்தான். 6

1892 கல்லு மாறு அகன்ற மார்பன் கருவியின் சிறுமை நோக்கி
மல்லு மாறாத திண்தோள் வளவர் கோன் ஒருவன் காலில்
செல்லும் ஆயிரம் பரிக்கு ஓர் சேவகன் என் போன் தானே
வெல்லும் மாறு எண்ணி வஞ்சி வேய்ந்து கொண்டு எழுந்து போந்தான். 7

1893 பல்வகைக் கருவி ஈட்டப் படையொடும் பரவை சீறிச்
செல்வது போலக் கன்னித் தீம் புனல் நாடு நோக்கி
மல்வரையாத தோளான் வரவு அறிந்து எழுந்து மேருக்
கல்வரி சிலையான் முன் போய்க் கைதவன் தாழ்ந்து கூறும். 8

1894 பொன்னது அனைய வேணிப் புனித இப் பூமி நேமி
உன்னது வலத்தினாலே உருட்டும் என் வலத்தை நோக்கான்

தன்னது வலத்தினால்என் தானையின் சிறுமை நோக்கி
என்னது தேயம் கொள்வான் எண்ணினான் போலும் மன்னோ. 9

1895 காவிரி நாடன் சேனைக் கடல் இடை எரி போல் மூண்டு
மேவினன் என்று கூறி மீனவன் வேண்ட வானில்
பூவிரி வாகை நீயே புனைய நாம் பொருதும் என்னா
நாவிரியாத மாற்ற நாயகன் கூறக் கேட்டான். 10

1896 எல்லி அம் கமலச் செவ்வி எனமுகம் மலர்ந்து நாதன்
அல்லி அம் கமலச் செம் தாள் அகம் தழீஇப் புறம்பு போந்து
பல்லியம் துவைப்பத் தானைப் பரவையுள் பரிமா ஊர்ந்து
கொல்லி அம் பொருப்பன் சேனை கடல் எதிர் குறுகினானே. 11

1897 பண்ணுதல் இசை வண்டு ஆர்க்கும் பசும் தொடைச் செழியன் தானை
எண்ணுதல் இல ஆம் சென்னி இரும் படைக் கடல நேர் ஆறாய்
நண்ணுதல் எனப் போய்ப் பொன்னி நாடவன் தமர் கட்கு எல்லாம்
கண்ணுதல் அருளால் ஆங்கு ஓர் கடல் எனத் தோன்றிற்று அம்ம. 12

1898 கடல் என வருமா ஊர்ந்து கைதவன் சேனை முன்போய்
அடல் அணி மேருக் கோட்டி ஆலவாய் நெடு நாண் பூட்டி
மடல் அவிழ் துழாய்க் கோன் ஆட்டி வாய் எரி புரத்தில் ஊட்டி
மிடல் அணி கூடல் கோமான் வேடு உருவாகி நின்றான். 13

1899 கங்குல் வாய்த் திங்கள் போலக் காது அணி தந்தத் தோடும்
கங்குல் வாய் முளைத்த மீன் போல் கதிர் முத்த வடமும் குஞ்சிச்
கங்குல் வாய்ச் சிலை போல் வெட்சிக் கண்ணிசூழ் கலாபச் சூட்டும்
கங்குல் வாய் கிழிக்கும் தந்தக் கடகமும் மின்னுக் கால. 14

1900 அண்டத்தார் அமரர் நாமம் அன்று தொட்டு அடையத தோற்று
கண்டத்தார் இருளே எங்கும் கலந்து எனக் கறுத்த மேனி
கொண்டத்தார் ஆரினார்கு ஓர் கூற்று என கொல் வேல் ஏந்திச்
சண்டத் தீ என்ன நின்றான் காவிரித் தலைவன் காணா. 15

1901 சீறி ஆயிரம் பரிக்கு ஓர் சேவகன் வந்தேன் என்னாக்
கூறினான் எதிர்த்தான் வெள்ளிக் குன்றவன் பத்து நூறு
மாறு இலாப் பரிக்கு மட்டு ஓர் வயவன் நீ அன்றோ எண்ணில்
ஈறு இலாப் பரிக்கும் ஒற்றைச் சேவகன் யானே என்றான். 16

1902 என்ற சொல் இடி ஏறு என்ன இரு செவி துளைப்பக் கேட்டு
நின்றவன் எதிரே மின்னு நீட்டிச் செல் மேகம் போலச்
சென்று வேல் வலம் திரித்துச் செயிர்த்தனன் அதிர்த்துச் சீற
வன் திறன் நூற்றுப் பத்து வயப்பரிக்கு ஒருவன் அஞ்சா. 17

1903 யாம் இனி இந்த வேலால் இறப்பதற்கு ஐயம் இல்லை

யாம் என அகன்றான் மாவோடு ஆயிரம் பரிக்கு ஓர் மள்ளன்
காமனை வெகுண்ட வேடன் மறைந்தனன் கங்குல் சோதி
மா மகன் அது கண்டு ஓடும் வளவனைத் துரத்திச சென்றான். 18

1904 துரந்திடும் அளவில் ஓடும் சோழனும் திரும்பி நோக்கிக்
கரும் தடம் கண்ணி பாகம் கரந்த வேடு வனைக் காணான்
வரும் துயர் அச்சம் தீர்ந்தான் மதுரையின் அளவும் பற்றிப்
புரந்தரற் புறம் கண்டானைப் புறம் கண்டு முடுக்கிப் போனான். 19

1905 கால் ஒன்று முடுக்கப் பட்ட கனல் ஒன்று நடந்தால் ஒத்து
வேல் ஒன்று தடக்கை நேரி வேந்தனால் முடுக்கு உண்டு ஒடும்
சேல் ஒன்று கொடியினான் தன் செழு நகர் விரைந்து செல்வான்
மால் ஒன்று களிற்றின் ஆங்கு ஓர் மது மலர்க் கிடங்கில் வீழ்ந்தான். 20

1906 மீனவன் மதுரை மூதுர் மேல் திசைக் கிடங்கில் வீழ
மான வெம் புரவி யோடும் வளவனும் வீழ்ந்தான் கூடல்
கோன் அவன் அருளால் வானோர் குரை கடல் கடையத் தோன்றும்
ஆனையின் எழுந்தான் தென்னன் கோழிவேந்து ஆழ்ந்து போனான். 21

1907 பிலத்து அளவு ஆழ்ந்த கடி மலர்க் கிடங்கில்
பெருந்தகை அவிந்தவன் துகில் பூண்
கலம் தரும் பேழை படை பரி மான் தேர் கரி எலாம்
கவர்ந்து தண் பொருனைத்
தலத்தவன் தங்கள் நாயகர் அணியத் தக்க
தூசு அணி கலன் நல்கி
நலத்தகையவர் பேர் அருள் கடற்கு அன்பு நதி
எனப் பெருகி வீற்று இருந்தான். 22

சோழனை மடுவில் வீட்டிய படலம் சுபம் ------
------------

## 38. உலவாக்கோட்டை அருளிய படலம் (1908 -1925 )

1908 மின் பனிக் கதிர் வேணி வானவன் மீனவன் தனை மான வேல்
முன் பனிக்க வலம் திரிந்து முடுக்கி நேரி அடுக்கலான்
பின் பனிக் கமலத் தடத்து இற விட்ட வாறு இது பெருமைசால்
அன்பனுக்கு உலவாத கோட்டை அளித்தவாறு கிளத்துவாம். 1

1909 பொடி ஆர்க்கும் மேனிப் புனிதர்க்குப் புனித ஏற்றுத்
கொடியார்க்கு வேதக் குடுமிக்கு இணையான கூடல்
படியார்க்கும் சீர்த்திப் பதி யோர் உழவோருள் நல்லான்
அடியார்க்கு நல்லான் அறத்திற்கும் புகழ்க்கும் நல்லான். 2

1910 அனையான் அறத்திற்கு அருள் போன்றவள் ஆன்ற கற்பின்
மனையாள் மரபின் வழுவாத தரும சீலை
எனையாரும் நன்கு மதிக்கும் இருக்கும் நீராள்
தனை ஆள் பதிக்குக் கதிக்குத் தனிச் சார்பு போல்வாள். 3

1911 பல்லேர் உழவின் தொழில் பூண்டு பயன்கள் கொள்வான்
வில்லேர் உழவன் கடன்கொண்டு மிகுந்த எல்லாம்
இல்லேர் உழத்தி மடைச் செல்வம் இயற்றி ஏந்த
அல் ஏறு கண்ட அடியாரை அருத்து நீரான். 4

1912 தொகை மாண்ட தொண்டர் சுவை ஆறு தழீஇய நான்கு
வகைமாண்ட மாறுபடும் உண்டி மறுத்து அருந்த
நகை மாண்ட அன்பின் தலை ஆயவன் நல்க நல்கப்
பகைமாண்ட செல்வ மணல் கேணியில் பல்கு நாளின். 5

1913 இந்நீர வாய வளம் குன்றினும் இன்மை கூறாத்
தன்னீர்மை குன்றான் எனும் தன்மை பிறர்க்குத் தேற்ற
நன்னீர் வயலின் விளைவு அஃகி நலிவு செய்ய
மின்னீர வேணி மதுரேசர் விலக்கினாரே. 6

1914 குன்றா விருத்திக் கடன் கொண்டு கொண்டு அன்பர் பூசை
நன்ற நடாத்தத் தொடுத்தான் கடன் தானும் கிட்டாது
ஒன்றாலும் கொண்ட விரதத்துக்கு உறுதி இன்றி
நின்றான் உடம்பை ஒறுக்கின்ற நியமம் பூண்டான். 7

1915 கொடுப்பார் அவரே விளைவும் கடன் கோளும் மாற்றி
தடுப்பார் எனின் மற்று அதை யாவர் தடுக்க வல்லார்
அடுப்பார் விழுமம் களைவார் அடியார்க்கு நல் ஊண்
மடுப்பான் நியமம் தடைபட்டு வருந்து கின்றான். 8

1916 விண் ஆறு சூடும் விடையான் தமர்க் கூட்டி அன்றி
உண்ணாதவன் தன் உயிர்க்குத் துணை ஆய கற்பில்
பண்ணார் மொழி தன்னொடும் பட்டினி விட்டு நெஞ்சம்
புண்ணாக ஆகம் பசித்தீயில் புழுங்கப் பட்டான். 9

1917 இறக்கும் உடம்பால் பெறும் பேறு இனி ஆவது என்னா
அறக் குன்று அனையான் மனையோடும் அடைந்து இச் செய்தி
நிறக் கின்ற செம் பொன் சிலையார்க்கு நிகழ்த்தி ஆவி
துறக் கின்றது வே துணிவு என்று துணிந்து போனான். 10

1918 ஐயன் திரு முன்னர் அடைந்து அடி தாழ்ந்து வானோர்
உய்யும் படி நஞ்சு அமுது உண்ட வொருவ உன் தன்

மெய் அன்பர் பூசைக்கு இடையூறு விளைய என்றன்
செய்யும் புலமும் விளைவு இன்றிச் சிதைந்த என்னா. 11

1919 விடம் நல்கு சூலப் படையாய் கடன் வேறு காணேன்
கடன் நல்க வல்லார் தமைக் காட்டுதி காட்டு இலா யேல்
மடம் நல்கும் இந்த உடம்பின் சுமை மாற்று வேன் என்று
உடன் நல்கு கற்புக்கு உரியா ளடும் வேண்டும் எல்லை. 12

1920 பஞ்சாதி வேதப் பொருள் சொன்ன பரமன் வாக்கு ஒன்று
அஞ்சாதி வேளாண் தலை வாவு உனது அகத்தில் இன்று ஓர்
செஞ்சாதி ஆய செழு வால் அரிக் கோட்டை உய்த்தேம்
எஞ்சாது இருக்கும் எடுக்கும் தொறும் என்றும் மாதோ. 13

1921 நீ நாளும் பூசித்து அதில் வேண்டிய கொண்டு நித்தம்
ஆனாத அன்பர்க்கு அமுது ஊட்டி எவர்க்கும் அன்ன
தானாதி நானா தருமங்களும் செய்தி வீடு
மேல் நாள் அளிக்கின்றனம் என்று விசும்பில் கூற. 14

1922 கேட்டு இன்பம் எய்தி கிளர் விம்மிதன் ஆகி வேதப்
பாட்டின் பயனை பணிந்து இல்லம் அடைந்து பண்டை
ஈட்டும் தவப் பேறு எனக் கண்டனன் தொண்டர்க்கு எந்தை
கூட்டும் கதி போல் உலவாமல் கொடுத்த கோட்டை. 15

1923 வான் ஆறு சூடி தரு கோட்டையை வைகல் தோறும்
பூ நாறும் சாந்தம் புகை ஒண் சுடர் கொண்டு அருச்சித்து
ஆனாத செவ்வி அடிசிற்கும் அதற்கு வேண்டும்
நானா கருவி விலைக்கும் அது நல்க வாங்கா. 16

1924 மின் ஆர் சடையான் தமர் ஆய்ந்தவர் வேதச் செல்வர்
தென் நாடர் தெய்வம் விருந்து ஒக்கல் செறிந்து நட்டோர்
முன் ஆம் எவர்க்கும் முகில் போல் வரையாமல் நல்கி
எந்நாளும் நோய் இன்றி அளகாபதி என்ன வாழ்ந்தான். 17

1925 அன்பன் அடியார்க்கு இனியான் அனி நாள் அளந்து அல்கித்
தன் பன்னி யொடும் அயலார் சுற்றம் தமரோடும்
பின்பு அந்நிலையே இமவான் மகனைப் பிரியாத
இன்பன் உருவாய் சிவ மா நகர் சென்று இறை கொண்டான். 18

உலவாக்கோட்டை அருளிய படலம் சுபம் ------

-----------

## 39. மாமனாக வந்து வழக்கு உரைத்த படலம் (1926 -1962 )

1926 தாமம் நார் இதழியார்தம் தமர்க்கு அன்பன் வறுமைப் பட்டோன்
ஆம நாள் உலவாக் கோட்டை அருளிய முறை ஈது ஐயன்
தே மன் நாள் முல்லைத் தீம் தார் சிறு தகை வணிகற்கு ஆக
மாமன் ஆம் படிவம் கொண்டு வழக்கு உரை வண்ணம் சொல்வாம். 1

1927 கன்னி நான் மாடக் கூடல் கடி நகர் வணிக மாக்கள்
தன்னின் மா நிதிக் கோன் அன்னான் தனபதி என்னும் பேரான்
மன்னினான் அனையான் கற்பின் மடவரல் சுசீலை என்பாள்
பொன்னி நாள் முளரிச் சேக்கைப் புண்ணியத் திருவின் அன்னாள். 2

1928 என இவர் தமக்கு மைந்தற் பேறு இன்றி இரங்கும் நாளில்
தனபதி மருமகன் தன்னைத் தகவுசால் மகவாக்கொண்டு
மன மகிழ் சிறப்பால் நல்க மனைவியும் தொழுது வாங்கிப்
புனைவன புனைந்து போற்றிப் பொலிவு உற வளர்த்துக் கொண்டாள். 3

1929 தனபதி மகப்பேறு அற்றான் ஆயினும் தணவாக் காதல்
மனைவிமேல் வைத்த ஆசை மயக்கினால் வருந்தி ஈன்ற
தனையனை மகவாத் தந்த தங்கை மேல் தீராப் பூசல்
வினை விளைத்து ஒழுக ஓர் நாள் இளையாளும் வெகுண்டு சொல்வாள். 4

1930 பெருமிதம் உனக்கு ஏன் பிள்ளைப் பேறு அற்ற பாவி நீ என்
அருமை நல் மகனால் அன்றோ இருமையும் அடைவாய் என்னப்
பெரிது நாண் அடைந்து மேலைக்கு ஆயினும் பிள்ளைப் பேறு
தரு தவம் புரிவேன் என்னாத் தனபதி தவம் மேல் செல்வான். 5

1931 தன் பெரும் செல்வம் எல்லாம் மருமகன் தனக்கே ஆக்கி
அன்பு கொள் மனைவி யோடு அரும் தவ நெறியில் சென்றான்
பின்பு அவன் வரவு தாழ்ப்ப மருமகன் பெற்ற எல்லாம்
வன்பினால் வழக்குப் பேசி வௌவினார் தாய மாக்கள். 6

1932 விளை நிலன் அடிமை பைம் பூண் வெறுக்கை நல் பசுக்கள் ஏனை
வளனும் மாற்றவர் கைக் கொள்ள வன் சிறை இழந்த புள் போல்
தளர் உறு மகனும் தாயும் சார்பு இலாத் தம்மனோர்க்கு ஓர்
களை கணாய் இருக்கும் கூடல் கடவுளே சரணம் என்னா. 7

1933 வந்து வான் அகடு போழ்ந்த மணி முடி விமானக் கோயில்
சுந்தர நாதன் பாதத் துணை தொழுது இறைஞ்சி யார்க்கும்
தந்தையும் தாயும் ஆகும் தம்பிரான் நீரே எங்கள்
எந்தையும் யாயும் என்னா இரங்கி நின்று இனைய சொல்வாள். 8

1934 என் மகன் தன்னை மைந்தன் இன்மையால் எவரும் காணத்

தன் மகனாகக் கொண்டு தகுதியால் அன்றே காணி
பொன் மனை பிறவும் நல்கிப் போயினான் என் முன் இப்பால்
வன்மையால் தாயத்தார்கள் அவை எலாம் வௌவிக் கொண்டார். 9

1935 ஒருத்தி நான் ஒருத்திக்கு இந்த ஒரு மகன் இவனும் தேரும்
கருத்து இலாச் சிறியன் வேறு களைகணும் காணேன் ஐய
அருத்தி சால் அறவோர் தேறு அருட் பெரும் கடலே எங்கும்
இருத்தி நீ அறியாய் கொல்லோ என்று பார் படிய வீழ்ந்தாள். 10

1936 மாறு கொள் வழக்குத் தீர்க்க வல்லவர் அருளினாலே
சீறு கொள் வடிவேல் கண்ணாள் சிறு துயில் அடைந்தாள் மெய்யில்
ஊறு கொள் கரணம் ஐந்தும் உற்று அறி கனவில் கங்கை
ஆறு கொள் சடையார் வேதச் செல்வராய் அடுத்துச் சொல்வார். 11

1937 புலர்ந்தபின் தாயத்தோரை புரவலன் ஆணை ஆற்றால்
வலம் தரு மன்றத்து ஏற்றி மறித்து அனை இருத்தி யாம் போந்து
தலம் தரும் அறிவான் மூத்தோர் அனைவரும் இசைய வந்து அச்
சலம் தரு வழக்குத் தீர்த்துத் தருகுவம் போதி என்றார். 12

1938 வேரி அம் குவளை உண்கண் விழித்தனள் வியந்து கெட்டேன்
ஆரும் இல்லார்க்குத் தெய்வம் துணை என்பது அறிந்தேன் என்னாத்
கார் இரும் கயல் உண் கண்ணாள் கணவனைத் தொழுது வாழ்த்திச்
சீர் இளம் குமரனோடும் தெரிவை தன் மனையில் சென்றாள். 13

1939 சென்றவள் கங்குல் எல்லை தெரிந்தபின் எழுந்து வெள்ளி
மன்றவன் கோயில் வாயில் வந்து வந்தனை செய்து அம் பொன்
குன்றவன் உரைத்த ஆற்றால் கொடுமைசால் வழக்குப் பூட்டி
வென்றவர் இருக்கை எய்தி விளம்புவாள் பலரும் கேட்ப. 14

1940 அட்டில் வாய் நெருப்பு இடேல் ஓர் அடி இடேல் அறத்தான்றிப்
பட்டிமை வழக்கால் வென்று போக ஒட்டேன் பலரும் கேட்க
இட்டனன் அரசன் ஆணை அறத்தவிசு ஏறி ஆன்றோர்
ஒட்டிய படி கேட்டு எங்கள் உரிப் பொருள்தந்து போமின். 15

1941 என்றனள் மறித்தலோடும் இழுக்கு உரையாடி வைது
வன்திறல் வலியார் தள்ளி அடித்தனர் மைந்தனோடும்
சென்றனள் முறையோ என்னாது இருந்த அறத்தவினோர் முன்
நின்று உரையாடினாள் கேட்டு அறிந்தனர் நீதி நூலோர். 16

1942 அறத்து தவிச்சு இருப்போர் ஏவல் ஆடவரோடும் போந்து
மறித்து அவைக் களத்தில் கூட்டி வந்தனள் வந்த எல்லை
அறக் கொடி பாகர் வெள்ளி அம்பல வாணர் தாம் அத்
திறத்து தனபதியே என ஈத் திரு உருக்கொண்டு செல்வார். 17

1943 பெரு விலைக் குண்டலம் பிடரில் பத்தி பாய்ந்து
எரிகதிர் கவிழ்ப்ப வாள் எறிக்கும் அங்கதம்
அருவரைத் தோள் கிடந்து இமைப்ப ஆகம் மேல்
குருமணிக் கண்டிகை குலாய்ப் பின் கோட்டவே. 18

1944 முரல் அளி புற இதழ் மொய்ப்பச் செய்ய தா
மரை சிறிது அலர்ந்து என அணி செய் மோதிரக்
கரதலம் வீசி ஓர் கடும் கண் ஏறு எனப்
பெருமித நடை கொடு நடக்கும் பெற்றியார். 19

1945 வாடிய முளரிபோல் மாறு இட்டார் இடத்து
ஊடியும் மலர்ந்த போது ஒப்ப மைந்தன் மேல்
நாடிய தண் அளி நயந்து உட்கிடை
கூடிய முகத்தினர் குறுகுவார் அவை. 20

1946 அரசன் இங்கு இல்லை கொல்லோ ஆன்றவர் இல்லை கொல்லோ
குரை கழல் வேந்தன் செங்கோல் கொடியதோ கோது இல் நூல்கள்
உரை செயும் தெய்வம் தானும் இல்லை கொல் உறுதியான
தருமம் எங்கு ஒளித்ததே கொல் என்று அறத் தவிசில் சார்வார். 21

1947 தனபதி வரவு நோக்கி வஞ்சனைத் தாயத்தார்கள்
இனை உறு மனத்தர் ஆகி விம்மிதம் எய்தி வெல்லும்
மனவலி இழந்து பண்டு வழக்கு அலா வழக்கால் வென்ற
வினை நினைந்து உள்ளம் அச்சம் நாணினால் விழுங்கப் பட்டார். 22

1948 மாதுலர் ஆகி வந்தோர் மருகனைத் தம்பின் வந்த
தாது உலராத கோதை தன் னொடும் தழீஇத் தம் கண்டம்
மீது உலராத சாம வேதம் ஆர்ப்பவர் போல் வாய் விட்டு
ஆதுலர் ஆனீர் அந்தோ ஐய என்று அழுது நைந்தார். 23

1949 குடங்கையின் நெடும் கணாளும் குமரனும் வணிகர் தாளில்
தடங்கணீர் ஆட்ட வீழ்ந்தார் தடக்கையால் எடுத்துப் புல்லி
மடங்கல் ஏறு அனையார் தாமும் மற்று அவர் தம்மைத் தம் கண்ணீர்
நெடும்கடல் வெள்ளத்து ஆழ்த்திக் குமரனை நேர்ந்து நைவார். 24

1950 ஐம் படை மார்பில் காணேன் சிறு சிலம்பு அடியில் காணேன்
மொய்ம்பு இடை மதாணி காணேன் முகத்து அசை சுட்டி காணேன்
மின் படு குழைகள் காணேன் வெற்று உடல் கண்டேன் அப்பா
என் பெறும் என்று பிள்ளைப் பணிகளும் கவர்ந்தார் என்னா. 25

1951 அனைவரும் இரங்க வாய்விட்டு அழுதவர் இளையாள் தன்னைத்
தனையனைக் கண்ணீர் மாற்றித் தடக்கையான் முதுகு தைவந்து
இனையன் மின் என் முன் வேறு ஒன்று எண்ணன் மின் எண்ணாவஞ்ச

வினைஞர் வல் வழக்குச் சோர்ந்து விடுவது காண்மின் என்னா. 26

1952 நட்பு இடை வஞ்சம் செய்து நம்பினார்க்கு ஊன் மாறாட்டத்து
உட்பட கவர்ந்து ஏற்றோர்க்கு இம்மியும் உதவார் ஆயும்
வட்டியின் மிதப்பக் கூறி வாங்கியும் சிலர் போல் ஈட்டப்
பட்டதோர் அறத்தாறு ஈட்டு நம் பொருள் படுமோ என்னா. 27

1953 மங்கல மாடம் ஓங்கு மதுரை நாயகனை நோக்கிச்
செம் கரம் சிரமேல் கூப்பி மாணிக்கம் தேற்றி விற்கும்
எம் குல வணிகர் ஏறே எம்மனோர் வழக்கை இந்தப்
புங்கவர் இடனாத் தீர்த்துத் தருக எனப் புலம்பி ஆர்த்தார். 28

1954 ஆவலித்து அழுத கள்வர் வஞ்சரை வெகுண்டு நோக்கிக்
காவலன் செங்கோன் உண்நூல் கட்டிய தருமத்தட்டில்
நா எனும் துலை நா விட்டு எம் வழக்கையும் நமராய் வந்த
மேவலர் வழக்கும் தூக்கித் தெரிகென விதந்து சொன்னார். 29

1955 நரை முது புலி அன்னான் சொல் கேட்டலும் நடுங்கிச் சான்றோர்
இருவர் சொல் வழக்கு மேல்கொண்டு அநுவதித்து இரண்டும் நோக்கித்
தெரி வழி இழுக்கும் ஞாதி வழக்கு எனச் செப்பக் கேட்டு
வெருவினர் தாயத்தார்கள் வலியரின் வேறு சொல்வார். 30

1956 தவலரும் சிறப்பின் ஆன்ற தனபதி வணிகர் அல்லர்
இவர் என அவையம் கேட்ப இருகையும் புடைத்து நக்குக்
கவள மான் உரித்துப் போர்த்த கண்ணுதல் வணிகர் கோமான்
அவரவர் குடிப்பேர் பட்டம் காணி மற்று அனைத்தும் கூறும். 31

1957 தந்தை தாய் மாமன் மாமி தாயத்தார் அவரை ஈன்றார்
மைந்தர்கள் உடன் பிறந்தார் மனைவியர் கிளைஞர் மற்றும்
அந்தம் இல் குணங்கள் செய்கை ஆதிய அடையாளங்கள்
முந்தையின் வழுவா வண்ணம் முறையினான் மொழிந்தான் முன்னோன். 32

1958 அனையது கேட்ட ஆன்றோர் அனைவரும் நோக்கி அந்தத்
தனபதி வணிகர் தாமே இவர் எனச்சாற்ற லோடும்
மனவலித் தாயத்தார் தம் வழக்கு இழுக்கு அடைந்த ஈது
நனை வழி வேம்பன் தேரின் தண்டிக்கும் நம்மை என்னா. 33

1959 இல்லினுக்கு ஏகி மீள்வன் யான் என்றும் குளத்திற்கு ஏகி
ஒல்லையில் வருவேன் என்று ஒவ்வொரு வார்த்தை இட்டு
வல் எழு அனைய தோளார் அனைவரும் வன் கால் தள்ளச்
செல் எழு முகில்போல் கூட்டம் சிதைந்தனர் ஒளித்துப் போனார். 34

1960 அனை அவர் போக நின்ற அறன் நவில் மன்றத்து உள்ளோர்
தனபதி வணிகர் தந்த தனம் எலாம் தந்த மைந்தற்கு

என மனை எழுதி வாங்கி ஈந்தனர் ஈந்த எல்லை
மனம் மொழி கடந்த நாய்கர் மறைந்து தம் கோயில் புக்கார். 35

1961 இம் எனப் பலரும் காண மறைந்தவர் இரும் தண் கூடல்
செம்மல் என்று அறிந்து நாய்கச் சிறுவனுக்கு உவகை தூங்க
விம்மிதம் அடைந்து வேந்தன் வரிசைகள் வெறுப்ப நல்கிக்
கைம் மறி வணிகர் கோயில் புதுக்கினான் கனகம் கொண்டு. 36

1962 பூத நாயகன் பூரண சுந்தரப் புத்தேள்
பாத சேகரன் வரகுண பாண்டியன் புயத்தில்
ஓத நீர் உலகின் பொறை சுமக்க வைத்து உம்பர்
நாதர் சேவடித் தாமரை நகை நிழல் அடைந்தான். 37

உலவாக்கோட்டை அருளிய படலம் சுபம் ------
----------------

## 40. வரகுணனுக்குச் சிவலோகம் காட்டிய படலம் (1963 - 2030)

1963 பண் கொண்ட வேத முதல் இடை ஈறு நாடரிய பரமன்
மாமனாகிய ஒரு வணிகன்
எண் கொண்ட காணி பொருள் கவர் ஞாதி மாதுலரை
எதிர் ஏறி வென்ற படி இதுவாம்
தண் கொண்ட நேமி வரகுண தேவன் எய்து பழி
தன்னைத் துடைத்து அனையம் அவன்
கண் கொண்டு காண உயர் சிவ லோகம் மதுரை தனில்
வருவித்த காதை இனி மொழிவாம். 1

1964 இய மானன் இந்து ரவி எரி வான் இலஞ்சல் இல
எறிகால் எனும் பகுதி இரு நால்
மயமான சுந்தரனை மனம் வாய் மெய் அன்பின் இறை
வழிபாடு அடைந்து வர குணனாய்ச்
சய வேளை வென்ற வடிவினன் ஈறு இல் வென்றி பெறு
சத வேள்வி இந்திரனை நிகர்வோன்
இயன் மேனி கொண்ட ஒளியினில் ஏழ் பசும் புரவி
இனன் தேசு வென்ற வர குணனே. 2

1965 மறை ஆதி கலை பலவும் மகம் ஆதி பல வினையும்
வழுவாது நிறுவு தலின் மலர்மேல்
இறை ஆகி மலர் வனிதை பிரிவான திருமகளிர் இக
போகம் விளைய முறை செயலால்
கறை ஆழி வளைகள் அணி கரன் ஆகி இகல் செய் பொறி
கரண் ஆதி பகைகளையும் நெறியால்
அறை வாய்மை உரையின் முழுது உணர்வால் எவ் உயிரும்

நிறை அரன் ஆகி உலகு முறை செயு நாள். 3

1966 வேட்டம் செய் காதல் ஒரு நாட்டம் ஏகி வன மேட்
டெங்கும்மா தடவி எரியா
நாட்டம் செய் காய் உழுவை நீட்டும் கை யானை முக
நாட்டும் பல் ஏனம் இவை முதலா
ஓட்டம் செய் தேரி ரவி கோட்டின் கணேறி இருள் ஊட்டம்
அந்தி மாலை வரும் அளவாக்
கோட்டம் செய்வார் சிலையின் மாட்டு அம்பின் ஊரியிர்
கூட்டு உண்டு மா நகரில் வருவான். 4

1967 காலில் கடும் புரவி மேலிற் கடிந்து வரு காலக் கடம்
தனில் ஓர் மறையோன்
மால் உற்று அயர்ந்து முகம் வேர்வைக் குறும் திவலை
வாரக் கிடந்து விழி துயில் வோன்
மேலக் கடும் புரவி கால் வைப்ப அந்தணனும் வீவுற்று
அவிந்தனன் அறியான்
கோலில் செலும் பரியின் மீனத்தனும் தனது கோயில்
புகுந்தனன் வளவே. 5

1968 கனவட்டத்து அடி இடறப் பொறி விட்டுப் புலன் அவியக்
கரணத் உட்பொதி உயிர் விட்டவன் ஆகம்
தனை ஒக்கல் பவனர் எடுத்தனர் கிட்டிக் குரிசில் கடைத்
தலை இட்டத் திறம் மொழியத் தமிழ் மாறன்
இனை உற்றுப் பனவர் கையில் கனகக் குப்பைகள் நிறை
வித்து எமதிக் உற்றவனை எடுத்து எரிமாலை
புனைவித்த அக் கடன் முடிவித்தனன் மற்றப் பழி படரின்
புதையப் பற்றியது இடைவிட்டு அகலாதே. 6

1969 பற்றிய பழிக்குத் தீர்வு பழ மறைக் கிழவர் சொன்ன
பெற்றியினை வேறுண்டி நதிக்கரைப் பெரு நூற் கேள்வி
முற்றிய மறை யோர்க்கு ஈந்து மூவராம் தாரு வேந்தைச்
சுற்றியும் தூர்வை கொய்து சுரபிகள் சுவைக்க ஈந்தும். 7

1970 அக மருடணத்தால் ஓமம் ஆற்றியும் ஆன் ஐந்து ஆவின்
நகை மணிக் கோடு தோய்ந்த நளிர் புனல் குடித்தும் தான
வகை பல கொடுத்து நீங்கா வலியதாய் இழுது பெய்த
புகை அழல் என மேல் இட்டுப் புலப்பட வளைந்தது அன்றே. 8

1971 ஏங்கும் பெருமூச்சு எறியும் கை யெறியும் குன்றின்
ஒங்கும் சிறுகும் உடன் ஆர்த்திடும் முன்னும் பின்னும்
பாங்கும் தொடரும் சிரிக்கும் பகுவாயை மெல்லும்
நீங்கும் குறுகும் பழிதா என நேர்ந்து பற்றும். 9

1972 மாசு உண்ட தெய்வ மணிபோல் பணி வாயில் பட்ட
தேசு உண்ட தீம் தண் மதிபோல் ஒளி தேம்பி வண்டு
மூசு உண்டதான முகமா உண்ட வெள்ளில் போலக்
காசுண்ட பூணன் அறைபோய கருத்தன் ஆனான். 10

1973 மறையோர்கள் பின்னும் பழி மேலிடு வண்ண நோக்கி
இறையோய் இது நான் முகன் சென்னி இறுத்த கூடல்
அற வேதியனைத் தினம் ஆயிரத் எண்கால் சூழல்
உறவே ஒழிக்கப் படும் இன்னம் உரைப்பக் கேட்டி. 11

1974 ஆனா விரத நெறியால் இரண்டு ஐந்து வைகல்
வான நாடனையும் அம் முறையால் வலம் செய்து வந்தாய்
ஆனல் அதற்கு வழிகாட்டும் என்று ஐயர் கூறப்
போனான் அரசன் புனிதன் திருக் கோயில் புக்கான். 12

1975 விழி ஆயிரத் தோன் பழி தீர்த்தனை வேதியன் தன்
கழியாத மாபாதகம் தீர்த்தனை கௌவைக் கங்கைச்
சுழி ஆறு அலைக்கும் சடையாய் எனைத் தொட்டு அலைக்கும்
பழியான் அதுந் தீர்த்து அருள் என்று பணிந்து வீழ்ந்தான். 13

1976 எண்ணும் படியும் முறையால் வளைந்து ஏத்த ஐயன்
விண்ணின்று இயம்பும் அரசே பரி மேத வேள்வி
நண்ணும் பயனோர் அடிவைப்பின் நண்ண வெம்மைப்
பண்ணும் வலத்தான் மகிழ்ந்தேம் பழி அஞ்சன் மன்னோ. 14

1977 பொன்னோடு முத்தம் கொழிக்கும் துறைப் பொன்னி நாடன்
நின்னோடு அமர் ஆற்ற நினைந்து எழு நீயு நேர்வாய்
அன்னோன் உனக்குப் புறகு இட்டு அகன்று ஓடும் நீயும்
பின்னோடி எட்டிப் பிடிப்பாரில் துரத்தும் எல்லை. 15

1978 எமையாம் அருச்சித்து இருக்கும் தலத்து எய்து வாயால்
அமையாத வன்கண் பழி ஆற்றுதும் என்னச் சேல்கண்
உமையாள் மணாளன் அருள் வாழ்த்தி உரகன் உச்சிச்
சுமையாறு தோளான் தொழுதான் இருக்கை புக்கான். 16

1979 ஆர்த்தார் முடியோன் சில நாள் கழித்து ஆற்றல் ஏற்ற
போர்த்தாவு வேங்கைக் கொடித்தானை புடவி போர்ப்பப்
பேர்த்தார் கலிவந்து எனப் பேரியம் ஆர்ப்பக் கன்னிப்
பார்த்தாமம் வேன் மீனவன் நாட்டில் படர்ந்த எல்லை. 17

1980 மிடைந்து ஏறு நேரிப் பொருப்பன் படை வேலை மேல் சென்று
அடைந்து ஏறி மீனக் கொடி யோன் அமர் ஆட வாழி
கடைந்து ஏறு வெற்பில் கலங்கிற்று எனக் கிள்ளி சேனை

உடைந்து ஏக வெந்நிட்டு உடைந்தோடினன் உள்ளம் வெள்கா. 18

1981 சுறவக் கொடி அண்ணல் துரந்து பின் பற்றிச் செல்வோன்
புறவக் கடி முல்லையும் தாமரைப் போதும் ஏந்தி
நறவக் கழி நெய்தலங் கானலின் ஞாங்கர் மொய்த்த
இறவப் புலவு கழுவீர்ந் துறைப் பொன்னி சேர்ந்தான். 19

1982 பூசத் துறையில் புகுந்து ஆடியப் பொன்னித் தென்சார்
வாசத்து இடை மா மருதைப் பணிதற்கு வைகைத்
தேசத்தவன் கீழ்த்திசை வாயில் கடந்து செல்லப்
பாசத் தளையும் பழியும் புற நின்ற அன்றே. 20

1983 சுருதிச் சுரும்பு புறம் சூழ்ந்து குழறத் தெய்வ
மருதில் சிறந்த பெரும் தேனைக் கண் வாய் அங்காந்து
பருகிப் படிந்து அழல் வாய் வெண்ணெய்ப் பாவை ஒப்ப
உருகிச் செயல் அற்று உரை அற்று உணர் வாகி நின்றான். 21

1984 நிரா மய பரமானந்த நிருத்த நான் மாடக் கூடல்
பராபர இமையா முக்கண் பகவ பார்ப்பதி மணாள
புராதன அகில நாத புண்ணிய மருதவாண
அரா அணி சடையா என்று என்று அளவு இலாத்துதிகள் செய்தான். 22

1985 சொல் பதம் கடந்த சோதி துதித்து அடி பணிந்த வேந்தை
மற் பெரும் தோளாய் கீழை வாயிலில் பிரமச் சாயை
நிற்பதம் நெறியால் செல்லேல் நிழல் மதி உரிஞ்சு மேலைப்
பொற்பெரு வாயின் நீங்கிப் போதி நம் மதுரைக்கு என்றான். 23

1986 வரகுணன் அது கேட்டு ஐயன் மருதினை வளைத்து நீங்கற்கு
அருமையால் வாயில் தோறும் அடிக்கடி வீழ்ந்து வீழ்ந்து
வரை துளைத்து அன்ன மேலை வாயிலால் போவான் அன்ன
திருமணிக் கோபுரம் தன் பெயரினால் செய்து சின்னாள். 24

1987 திருப்பணி பலவும் செய்து தென் திசை வழிக் கொண்டு ஏகிச்
சுருப்பணி நெடு நாண் பூட்டுஞ் சுவைதண்டச் சிலையால் காய்ந்த
மருப்பணி சடையான் கோயில் வழி தொறும் தொழுது போற்றிப்
பொருப் பணி மாடக் கூடல் பொன்னகர் அடைந்தான் மன்னோ. 25

1988 தொடுபழி தொலை வித்து ஆண்ட சுந்தரத் தோன்றல் பாதக்
கடிமலர் அடைந்து நாளும் கைதொழுது உலகம் எல்லாம்
வடு அறு செங்கோல் ஒச்சும் வரகுணன் அறவோர் நாவால்
அடு சுவை அமுதம் அன்ன அரன் புகழ் செவி மடுப்பான். 26

1989 வேதம் ஆகமம் புராணம் மிருத்திகள் முதலா நூலும்
ஒதுவது உலகின் மிக்கத்து ருத்திர உலகம் என்னும்

போதம் அது அகம் கொண்டு அந்தப் பொன் பதி காண வேண்டும்
காதல் செல் வழியே ஈசன் கங்குலில் கோயில் எய்தா. 27

1990 மாழை மான் மட நோக்கிதன் மணாளனை வணங்கிப்
பிழை ஏழ் பவம் கடந்து நின் அடி நிழல் பெற்றோர்
சூழ நீ சிவபுரத்தில் வீற்று இருப்பது தொழுதற்கு
ஏழை யேற்கு ஒரு கருத்து வந்து எய்தியது எந்தாய். 28

1991 என்ற காவலன் அன்பினுக்கு எளியராய் வெள்ளி
மன்ற வாணர் அவ் உலகை இவ் வுலகு இடை வருவித்து
இன்று காட்டுதும் இவற்கு எனத் திரு உளத்து எண்ணம்
ஒன்றினார் அஃது உணர்ந்ததால் உருத்திர உலகம். 29

1992 கோடி மாமதிக் கடவுளார் குரூச்சுடர் பரப்பி
நீடி ஒர் இடத்து உதித்து என மின் மினி நிகர்த்து
வாடி வான் இரு சுடர் ஒளி மழுங்க வான் இழிந்து
தேடினார்க்கு அரியான் உறை சிவபுரம் தோன்ற. 30

1993 ஆண்ட நாயகன் நந்தியை அழைத்து எமக்கு அன்பு
மாண்ட காதலான் வரகுண வழுதி நம் உலகம்
காண்டல் வேண்டினான் காட்டு எனக் கருணையால் ஏவல்
பூண்ட வேத்திரப் படையினான் தொழுதனன் போந்தன். 31

1994 வருதியால் எனப் பணிந்து எழு வரகுணன் கொடு போய்க்
கருதி ஆயிரம் பெயர் உடை கடவுளன் முகத்தோன்
சுருதி ஆதி ஈறு அளப்பரும் சொயம் பிரகாசப்
பரிதி ஆள் சிவபுரம் இது பார் எனப் பணித்தான். 32

1995 கருப்பும் கமழ் துளர் பசும் கால்களால் உதை உண்டு
அருப்பினம் சிதைந்து ஆயிரப் பத்தி யோசனை போய்
மருக் கமழ்ந்து நூறு ஆயிரம் வால் இதழ்க் கமலம்
இருக்கும் ஒடைகள் புடை தொறும் தழுவிய ஆறும். 33

1996 வரம்பின் மாதரார் மதுரவாய் திறந்து தேன் வாக்கும்
நரம்பின் ஏழ் இசை யாழ் இசை நகை மலர்த் தருவின்
சுரும்பின் நேரிசை நாரத தும்புரு இசைக்கும்
இரும்பு நீர் மெழுகு ஆக்கிய இன்னிசை எங்கும். 34

1997 அமுத வாவியும் பொன் மலர் அம் புயத் தடமும்
குமுதவாய் அரமாதர் ஆம் குயில் இனம் பயிலும்
நிமிர வாள் விடு மரகத நெடிய பைம் காவும்
திமிர மாசறக் கழுவிய தேவர் வாழ் பதமும். 35

1998 அலங்கு பால் கடல் போல் புறத்து அமுதநீர் அகழும்
பொலம் செய் ஞாயில் சூழ் புரிசையும் பொன் செய் கோபுரமும்
நலம் கொள் பூ இயல் விதியும் நவ மணி குயின்ற
துலங்கு மாளிகைப் பந்தியும் சூளிகை நிரையும். 36

1999 ஐம் புலங்களும் வைகலும் விருந்ததா வருந்த
வெம்பு நால் வகை உண்டியும் வீணையும் சாந்தும்
செம் பொன் ஆரமும் ஆடலின் செல்வமும் தெய்வப்
பைம் பொன் மேகலை ஓவியப் பாவை ஒப்பாரும். 37

2000 படர்ந்த வார் சடை உருத்திரர் பணைத்து இறு மாந்த
வடம் கொள் பூண் முலை உருத்திர மகளிரொடு அமரும்
இடம் கொள் மாளிகைப் பந்தியும் இகல்விளை துன்பம்
கடந்த செல்வமும் கவலை இல் போகமும் காட்டி. 38

2001 முண்டக ஆசனன் பதம் இது மூவுலகு அளந்த
தண் துழாயவன் புரம் இது தனி முதல் வடிவம்
கொண்டு வீறு சால் உருத்திரர் கோப்பதி இன்ன
எண் திசா முகம் காவலர் உறை விடம் இவை காண். 39

2002 புலரும் முன் புனல் ஆடி நீறு ஆடி நம் புனிதன்
இலகும் ஆலயம் வினக்கி நம் தன் பணி இயற்றி
மலர் கொய்து ஆய்ந்தனர் தொடுத்து அரன் புகழ் செவி மடுத்து இவ்
உலக வாணராய்ப் போகம் உற்று உறைகு நர் இவர்காண். 40

2003 தூயர் ஆகி ஐஞ் சுத்தி செய்து அகம் புறம் இரண்டின்
நேயராய் விதி நெறியின் நான் முகமன் ஈர் எட்டால்
காயம் வாய் மனம் ஒருமையால் அர்ச்சித்துக் கடவுள்
நாயன் அரருகு உறைபதம் நண்ணினார் இவர் காண். 41

2004 கிளர்ந்த காலினால் அங்கியை நிமிர்த்து மேல் கிடைத்து
வளர்ந்த பிங்கலை இடை நடு வழி உகு மதியின்
விளைந்த இன் அமுது உண்டு நம் விடையவன் வடிவம்
குளம்தனில் குறித்து அவன் உருக் கொண்டவர் இவர் காண். 42

2005 முக்கண் நாயகன் பொருட்டு என வேள்விகள் முடித்துத்
தொக்க வேதியர் இவர் புனல் சாலை இத் தொடக்கத்
தக்க பேர் அறம் புகழ் பயன் தமை நன்கு மதிக்கும்
பொக்க மாறிய நிராசையால் புரிந்தவர் இவர் காண். 43

2006 மறையின் ஆற்றினார் தந்திர மரபினான் மெய்யின்
நிறையும் நீற்றினர் நிராமயன் இருந்த ஐந்து எழுத்தும்
அறையும் நாவினர் பத்தராய் அரன் புகழ் கேட்கும்

முறையினால் இவர் வினை வலி முருக்கினார் கண்டாய். 44

2007 மறைகளின் சத உருத்திர மந்திரம் நவின்றோர்
நிறை கொள் கண்டிகை நீறு அணி நீரர் யாரேனும்
குறி குணம் குலன் குறித்திடாது அன்பரைச் சிவன் என்று
அறியும் அன்பினால் பிறவி வேர் அறுத்தவர் இவர் காண். 45

2008 ஆன் அஞ்சு ஆடிய பரம் சுடர் இறை சிவஞான
தானம் செய்தவர் தருப்பணம் செய்தவர் சாம
கானம் செய்தவற்கு ஆலயம் கண்டு தாபித்தோர்
ஊனம் சேர் பிறப்பு அறுத்து வாழ் உத்தமர் இவர்காண். 46

2009 சிவனை அர்ச்சனை செய்பவர்க்கு இசைவன செய்தோர்
அவன் எனக் குறித்து அடியரைப் பூசை செய்து ஆறு
சுவைய இன் அமுது அருத்தினோர் தொண்டர் தம் பணியே
தவம் எனப் புரிந்து உயர்ச்சியைச் சார்ந்தவர் இவர்காண். 47

2010 ஆதி சுந்தரக் கடவுளுக்கு ஆலயம் பிறவும்
நீதியால் அருச்சனை பிற பணிகளும் நிரப்பிப்
பூதி சாதன வழி நிலம் புரந்து இவண் அடைந்த
கோது இலாத நின் குடிவழிக் கொற்றவர் இவர்காண். 48

2011 என்று வேத்திரம் கொடு குறித்து எம் இறை நந்தி
கொன்றை வேணியன் அடியர் தம் குழாத்தினைத் தேற்றி
நின்று வீழ்ந்து வீழ்ந்து அஞ்சலி முகிழ்த்திட நெறியே
சென்று வானவர் நாயகன் திரு முன்பு விடுத்தான். 49

2012 மறைகள் ஆகமம் வடிவு எடுத்து இரு புடை வாழ்த்த
நறை கொள் யாழ் தழீஇத் தும்புரு நாரதர் பாட
அறை கொள் வண்டு இமிர் கொம்பரின் அரம்பையர் ஆடக்
குறைகொள் வானவர் பதம் கிடையாது இறை கொள்ள. 50

2013 மதங்க விழ்க்கும் ஆல் வரை முக மைந்தனும் சூரன்
கதங்கவிழ்த்த வேல் கந்தனும் கருதலன் வேள்வி
விதங்க விழ்த்த வாள் வீரனும் வெயின் முடித்தார் தேன்
பதங்க விழ்ப்ப வீழ்ந்து ஏயின பணி வழி நிற்ப. 51

2014 தூங்கு தானையை ஒதுக்கி வாய் துணைக் கரம் பொத்தி
ஓங்கு மால் அயன் தம் குறை ஒதுங்கி நின்று உரைப்ப
வாங்குவான் சிலை இந்திரன் முதல் திசை வாணர்
தாங்கள் தாம்புரி காரியக் குறை நின்று சாற்ற. 52

2015 எழுவினோடு தண்டு ஏந்தி வாய் மென்று எயிறு அதுக்கிக்
குழுமு பாரிடத் தலைவரும் கோடி கூற்று ஒதுங்கி

விழும முழ்கி மெய் பனித்திட விதிர்க்கும் முக்குடுமிக்
கழுமுள் ஏந்திய கணத்தவர் கடை தொறும் காப்ப. 53

2016 சித்தர் வானவர் தானவர் சாரணர் திணி தோள்
வைத்த யாழினர் கின்னரர் மாதவர் இயக்கர்
பைத்த பாரிடர் காருடர் பாதல வாணர்
சுத்த யோகியர் முதல் கணத் தொகை எலாம் பரவ. 54

2017 இனி வரும் பிறப்பு அறுத்து எமைக் காத்தியால் எனத் தம்
கனி அரும்பிய அன்பு எழு கருணை ஆர் அமுதைப்
பனி வரும் தடம் கண்களால் பருகி மெய் பனிப்ப
முனிவர் சங்கர சிவ சிவ என முறை முழங்க. 55

2018 வரம் தவாதன யாவர்க்கும் வரன் முறை வழங்கி
முருந்தவா நகை மலைக் கொடி முகிழ் நகை அரும்பத்
திருந்த ஆயிரம் கதிர் விடு சிங்க மெல் அணைமேல்
இருந்த நாயகன் இருக்கை கண்டு இறைஞ்சினான் இறைவன். 56

2019 உரைகளும் தடுமாற மெய் உரோமமும் சிலிர்ப்பக்
கரை இறந்த இன்னருள் பெரும் கடலில் அன்பு எனும்
திரை இறந்தவாறு ஈர்த்திட மிதந்து போய்ச் செப்பின்
வரை இறந்த ஆனந்த வார் அமுதை வாய் மடுத்தான். 57

2020 தன் புலன்களும் கரணமும் தன்னவே ஆக்கி
அன்பு உடம்பு கொண்டு அவன் எதிர் அருள் சிவ லோகம்
பின்பு பண்டு போல் மதுரையாப் பிராட்டியும் தானும்
முன்பு இருந்தவாறு இருந்தனன் சுந்தர மூர்த்தி. 58

2021 வேந்தர் சேகரன் வரகுணன் விண் இழி கோயில்
ஏந்தல் சேவடி இறைஞ்சி நின்று இறை அருள் பெருமை
ஆய்ந்த வாவு தன் அகம் புக இன்ப மோடு அன்பு
தோய்ந்து ஆரையர் துளும்ப நாக் குழறிடத் துதிப்பான். 59

2022 நாயினேன் தன்னை நடுக்கும் பழி அகற்றித்
தாயின் நேர் ஆகித் தலை அளித்தாய் தாள் சரணம்
சேயினேன் காணச் சிவலோகம் காட்டிப் பின்
கோயில் நேர் நின்ற அருள் குன்றெ நின் தாள் சரணம். 60

2023 மாழ் ஆழ்ந்து செய்யும் வினை வழி போய் வல் நரகில்
ஆழா அடியனேற்கு அன்பு தந்தாய் தாள் சரணம்
ஏழ் ஆகி நான்கு வகையாய் எழுபிறப்பும்
பாழாக என்னைப் பணி கொண்டாய் தாள் சரணம். 61

2024 வெம்கண் பழியின் வினையேனை வேறு ஆக்கித்
திங்கள் குலக் களங்கம் தீர்த்தாய் நின் தாள் சரணம்
அம் கண் சிவபுரம் உண்டு அன்புடையார்க்கு என்பதை இன்று
எங்கட்குக் காட்டி இசைவித்தாய் தாள் சரணம். 61

2025 என்ன ஏத்தி இன் அருண் முகத்து ஈறு இலா அன்பால்
பின்னர் வேறு பல் பூசையும் பிறக்கு வித்து இருந்தான்
மன்னர் ஏறு அடையார்க்கு ஒரு மடங்கலே அடல் வேல்
தென்னர் ஏறு எனத் தோன்றிய வர குண தேவன். 62

2026 என்ற தென் மலை முனிவனை இருடிகள் நோக்கி
அன்று வாசவன் பழி கரி சாபம் அந்தணனைக்
கொன்று தாயொடும் கூடிய கொடுவினை முதலாத்
துன்று பாவமும் மதுரையில் தொலைத்தனன் அன்றோ. 63

2027 பரமன் எண் குணன் பசுபதி வரகுணன் பற்றும்
பிரம வன் பழி இடை மருது இடை விட்டுப் பெயர
வரம் அளித்தவாறு என்னைகொல் வள்ளலே இதனைத்
திரம் உறப் புகல் எமக்கு என முனிவர் கோன் செப்பும். 64

2028 பூத நாயகன் சுந்தரன் புண்ணிய மூர்த்தி
ஆதலால் அன்ன தலத்து உறை அடியவர் அஞ்சிப்
பாதகம் செயாது ஒழுகு உறூஉம் படி நினைந்து இனைய
தீது உறூஉம் பழிதனை இடை மருதினில் தீர்த்தான். 65

2029 என்ற அகத்திய முனி இறை இறை கொடுத்து இயம்ப
நன்று எனச் சிரம் பணித்து மெய்ஞ் ஞான ஆனந்தம்
துன்றி நற்றவர் சுந்தரச் சோதி சேவடிக் கீழ்
ஒன்று அற்புத ஆனந்த உததியுள் குளித்தார். 66

2030 அன்ன தனித் தொல் மதுரை அன்று தொடுத்து இன்று எல்லை
தன் அனையது ஆகிய தலங்கள் சிகாமணி ஆகிப்
பொன் நகரின் வளம் சிறந்து பூ உலகில் சிவலோகம்
என்ன இசை படப் பொலிந்தது ஏழ் இரண்டு புவனத்தும். 67

உலவாக்கோட்டை அருளிய படலம் சுபம் ------
--------------

## 41. விறகு விற்ற படலம் (2031 - 2100 )

2031 நெடியவன் பிரமன் தேட நீண்டவன் தென்னற்கு ஏழின்
முடியது ஆம் சிவ லோகத்தைக் காட்டிய முறை ஈது ஐயன்
படிமிசை நடந்து பாடிப் பாணன் தன் விறகு ஆளாகி

அடிமை என்று அடிமை கொண்ட அருள் திறம் எடுத்துச் சொல்வாம். 1

2032 மன்றல் அம் தெரியல் மார்பன் வரகுணன் செங்கோல் ஓச்சிப்
பொன் தலம் காவலானில் பொலியும் நாள் ஏமநாதன்
என்று ஒரு விறல் யாழ்ப் பாணன் வட புலத்து இருந்தும் போந்து
வென்றி கொள் விருதினோடும் விஞ்சை சூழ் மதுரை சார்ந்தான். 2

2033 பூழியர் பெருமான் கோயில் புகுந்து வேத்து அவையத்து எய்திச்
சூழி மால் யானை யானைத் தொழுது பல் புகழ் கொண்டாடி
ஏழ் இசை மழலை வீணை இடந்தழீ இச் சுருதி கூட்டி
வாழியின் இசைத்தேன் மன்னன் அரும் செவி வழியப் பெய்தான். 3

2034 முகை உடைத்து அவிழ்ந்த மாலை முடித்தலை துளக்கித் தூசு
பகல் அவிர் மணிப்பூண் நல்கிப் பல் உணாக் கருவி நல்கி
அகன் மனை வேறு காட்டி அரசர் கோன் வரிசை செய்ய
இகல் அறு களிப்பினோடு இசை வல்லான் இல்லில் புக்கான். 4

2035 மீனவன் வரிசை பெற்ற செருக்கினும் விருதினானும்
மான மேல் கொண்டு தன்னோடு இன்னிசை பாடவல்ல
தான யாழ்ப் புலவர் வேறு இங்கு இல் எனத் தருக்கும் செய்தி
கோன் அறிந்து உழையர்க் கூவி பத்திரற் கொணர்திர் என்றான். 5

2036 உழையரால் விடுக்கப் பட்ட பத்திரன் உவரிவென்றோன்
கழல் பணிந்து அருகு நிற்பக் கௌரியன் நோக்கிப் பாணி
பழகு இசை வல்லானோடும் பாடுதி கொல்லோ என்ன
மழலை யாழ் இடம் தோள் இட்ட பாணர் கோன் வணங்கிச் சொல்வான். 6

2037 தென்னவர் பெரும யான் உன் திரு உள வலனும் கூடல்
முன்னவன் அருளும் ஊட்டும் முயற்ச்சியான் முயன்றுபாடி
அன்னவன் விருது வாங்கி அவனை வீறு அழிப்பன் என்றான்
மன்னவன் நாளைப் பாடு போ என வரைந்து சொன்னான். 7

2038 இல் கண்ணே இசைவல்லா போய் இருந்துழி அனையான் பாங்கர்
கற்கும் பாண் மக்கள் மல்ல ஆவணம் கவலை மன்றம்
பொன் குன்றம் அனைய மாட மறுகு எங்கும் போகிப் போகிச்
சொல் குன்றா வகையால் பாடித் திரிந்தனர் வீறு தோன்ற. 8

2039 இவ் விசை கேட்டு நன்று என்று அதிசயித்து இசை வல்லான்பால்
வவ்விசை மைந்தர் பாடும் வண்ணம் ஈது என்னை கெட்டேன்
அவ்விசை வல்லான் பாடும் முறை எற்றோ அவனை நாளைச்
செவ்விசை பாடி வெல்வது எவன் எனத் திவவுக் கோலான். 9

2040 மை அணி மிடற்றினானை மதுரை நாயகனை வந்தித்து
ஐயனே அடியேற்கு இன்று உன் அருள் துணை செய்யல் வேண்டும்

மெய்யனே என்று போற்றி வேண்டு கொண்டன்பு தோய்ந்த
பொய்யறு மனத்தான் இல்லாம் புக்கு இனிது இருந்தான் இப்பால். 10

2041 வருத்தன் ஆகி வந்து இரந்தவன் இசைப் பகை மாற்ற
விருத்தன் ஆம் விறகு ஆள் என விண் இழி விமானத்து
ஒருத்தனான் அறிவு ஆகிய உண்மை ஆனந்தத்
திருத்தனார் தமது இச்சையால் திரு உருக் கொள்வார். 11

2042 அழுக்கு மூழ்கிய சிதர் அசைத்து அவிர் சடை அமுதம்
ஒழுக்கு வான்மதி வாங்கியே செருகியது ஒப்ப
மழுக்கு கனல் வெள் வாய்க் குயம் வலம் படச் செருகி
இழுக்கு தேய் செருப்பு அருமறை கடந்தான் ஏற்றி. 12

2043 பழைய தோர் பொல்லாம் பொத்திய பத்தர் யாழ்க்கோன் தோள்
உழைய தாகி விட்டு எருத்தலைத்து ஊசல் ஆடிய ஒண்
குழைய காதினில் களவிணர்க் குறிய காய் தூக்கித்
தழையும் வார்சிகை சரிந்திடச் சுமை அடை தாங்கி. 13

2044 தறிந்த இந்தனம் தினந்தோறும் தாங்கி நீள் பங்கி
பறிந்து தேய்ந்து அழுந்திய தலை உடையராய்ப் பரிந்து
மறிந்த கங்கையும் பங்கு உறை மங்கையும் காணா
தெறிந்த இந்தனச் சுமை திரு முடியின் மேல் ஏற்றி. 14

2045 என்பு தோன்றி ஊன் இன்றியே இளைத்த யாக்கையராய்
அன்பு தோன்றியே கண்டவர் அகம் கனிந்து இரங்க
வன்பு தோன்றிய மன மொழி கடந்த தாள் மலர் பார்
முன்பு தோன்றிய தவத்தினாள் முடிமிசைச் சூட. 15

2046 திருமுகத்து வேர் அரும்ப வாய் குவித்து ஒலி செய்ய
வருவர் கல் சுமை தாங்கி மேல் சார்த்து வார் மடு நீர்
பருகுவார் எடுப்பார் தலை வெம்மை வேர்பறிய
இருகை யாலடிக் கடி எடுத்து ஏந்தி ஊர் புகுவார். 16

2047 நடந்து கொள்ளுநர்க்கு அறவிலை பகர்ந்து நான் மாடம்
மிடைந்த வீதியும் கவலையும் முடுக்கரு மிடைந்து
தொடர்ந்த வேதமும் பிரமன் மால் சூழ்ச்சியும் பகலும்
கடந்து போகி அவ் இசை வலான் கடைத் தலைச் செல்வார். 17

2048 வரவு நேர்ந்து அழைப்பவர் என ஆம்பல் வாய் மலர
இரவு கான்று வெண்மதி நகைத்து எழ உயிர்த்துணைவன்
பிரிவு நோக்கினார் எனக் கணீர் பில்கு தாமரையின்
நிரைகள் கூம்பிடக் கதிரவன் குட கடல் நீந்த. 18

2049 பறவை வாய் அடைத்து அருகு அணை பார்ப் பொடும் பெடையைச்
சிறகரால் அணைத்து இரும் பொழில் குடம் பையுள் செறிய
நறவவாய்ப் பெடை உண்ட தேன் நக்கி வண்டு ஓடைப்
பொறைகொள் தாமரைப் பள்ளியுள் புகுந்து கண் படுக்க. 19

2050 புல் என் நீள் நிலைக் குரங்கினம் பொதும்பர் புக்கு உறங்க
முல்லை யாய் மகா உய்த்தரக் கன்று உள்ளி முந்திக்
கொல்லை அன் நிரை மனை தொறும் குறுகிடச் சிறுபுன்
கல்வி மாணவச் சிறார் பயில் கணக்கு ஒலி அடங்க. 20

2051 புனைந்த வாழ் கடல் கரும் படாம் உடம்பு எலாம் போர்த்து
வனைந்த பூண் முலை நிலமகள் துயில்வது மானக்
கனைந்த கார் இருண் மெல் எனக் கவிதரப் பிரிவால்
இனைந்த காதலர் நெஞ்சில் வேள் எரிகணை நாட்ட. 21

2052 திங்கள் வாள் நுதல் முயல் கறைத் திலகமும் சிவந்த
மங்குல் ஆடையும் மயங்கு இருள் ஓதியும் வான்மீன்
பொங்கும் ஆரமும் பொலிந்து தன் கொண்கனைப் பொருப்பன்
மங்கை தேடி வந்தாள் என வந்தது மாலை. 22

2053 எடுத்த இந்தனம் ஒருபுறத்து இறக்கி இட்டு ஊன்றி
அடுத்த வன்புறம் திண்ணை மீது அமர்ந்து இளைப் பாறித்
தொடுத்த இன்னிசை சிறிது எழீப் பாடினார் சுருதி
மடுத்தி யார் அவன் பாடுவான் என்று இசை வல்லான். 23

2054 வண்டு அறை கொன்றையான் முன் வந்து நீ யாரை என்றான்
பண் தரு விபஞ்சி பாணபத்திரன் அடிமை என்றான்
முண்டக மலரோன் மாயோன் புரந்தரன் முதல் மற்ற ஏனை
அண்டரும் தன் குற்றேவல் அடிமையாக் கொண்ட அம்மான். 24

2055 கனி இசைக் கிழவன் தன் கீழ்க் கற்பவர் அனேகர் தம் முள்
நனி இசைக் கிழமை வேட்டு நானும் அவ் வினைஞன் ஆனேன்
தனி இசைக் கிழவன் நோக்கித் தலை எலாம் ஒடுங்க மூத்தாய்
இனியிசைக் கிழமைக்கு ஆகாய் என்று எனைத் தள்ளி விட்டான். 25

2056 வெவ் விறகு எறிந்து கட்டி விலை பகர்ந்தேனும் ஐய
இவ்வயிறு ஓம்புகேன் இத் தொழில் பூண்டேன் என்ன
நைவளம் தெரிந்த ஏம நாதனும் விறகு மள்ளா
அவ்விசை ஒருகால் இன்னும் பாடு என ஐயன் பாடும். 26

2057 குண்டு நீர் வறந்திட்டு அன்ன நெடும் கொடிக் குறுங்காய்ப் பத்தர்த்
தண்டு நீள் நிறத்த நல் யாழ் இடம் தழீஇ தெறித்துத் தாக்கிக்
கண்டு ஆடகம் திரித்துக் கௌவிய திவ விற் பாவ

விண்டு தேன் ஒழு கிற்று என்ன விக்கி மென் சுருதி கூட்டி. 27

2058 விசை யொடு தானம் தோறும் விரல் நடந்து ஊசல் ஆட
இசை முதல் ஏழில் பல் வேறு இன்னிசை எழும் சாதாரி
அசை யோடு வீதிப் போக்கு முடுகியல் அராகம் யார்க்கும்
நசைதரு நரம்பு கண்ட ஒற்றுமை நயம் கொண்டு ஆர்ப்ப. 28

2059 வயிறது குழிய வாங்கல் அழுமுகம் காட்டல் வாங்கும்
செயிர் அறு புருவம் ஏறல் சிரம் நடுக்கு உறல் கண் ஆடல்
பயிர் அரு மிடறு வீங்கல் பையென வாய் அங்காத்தல்
எயிறு அது காட்டல் இன்ன உடல் தொழில் குற்றம் என்ப. 29

2060 வெள்ளை காகுளி கீழோசை வெடி குரல் நாசி இன்ன
எள்ளிய எழாலின் குற்றம் எறிந்து நின்று இரட்டல் எல்லை
தள்ளிய கழி போக்கு ஓசை இழைத்தன் நெட்டு உயிர்ப்புத் தள்ளித்
துள்ளல் என்று இன்ன பாடல் தொழில் குற்றம் பிறவும் தீர்ந்தே. 30

2061 எழுது சித்திரம் போல் மன்னி இழும் எனும் அருவி ஓதை
முழவு ஒலி கஞ்சம் நாதம் வலம் புரி முரலும் ஓசை
கொழுதிசை வண்டின்று ஆரி என குணனும் வேரல்
விழும் இலை சிரன் மீன் மேல் வீழ் வீழ்ச்சி போல் பாடல் பண்பும். 31

2062 பொருந்த மந்தரத் தினோடு மத்தி மந்தாரம் போக்கித்
திருந்திய துள்ளல் தூங்கல் மெலிவது சிறப்பச் செய்து
மருந்தன செய்யுள் ஓசை இசை ஓசை வழாமல் யார்க்கும்
விருந்து எனச் செவியின் மாந்தப் பாடினார் வேத கீதர். 32

2063 விரைசார் மலரோன் அறியா விகிர்தன்
அரசாய் மதுரை அமர்ந்தான் என்னே
அரசாய் மதுரை அமர்ந்தான் அவன் என்
புரை சார் மனனும் புகுந்தான் என்னே. 33

2064 பாடல் மறையும் தௌ◌ியாப் பரமன்
கூடல் கோயில் கொண்டான் என்னே
கூடல் போலக் கொடி ஏனகமும்
ஆடல் அரங்கா அமர்ந்தான் என்னே. 34

2065 நீல வண்ணன் தேறா நிமலன்
ஆல வாயில் அமர்ந்தான் என்னே
ஆல வாயான் அலரில் வாசம்
போல் என் உளமும் புகுந்தான் என்னே. 35

2066 பாணர் தம்பிரானைக் காப்பான் பருந்தோடு நிழல் போக்கு என்ன

யாழ் நரம்பிசை பின் செல்ல இசைத்த இன்னிசைத் தேன் அண்ட
வாணர்தம் செவிக்கால் ஓடி மயிர்த்துனை வழியத் தேக்கி
யாணரின் அமுத யாக்கை இசை மயம் ஆக்கிற்று அன்றே. 36

2067 தருக்களும் சலியா முந்நீர்ச் சலதியும் கலியா நீண்ட
பொருப்பிழி அருவிக் காலும் நதிகளும் புரண்டு துள்ளா
அருள் கடல் விலைத்த கீத இன்னிசை அமுதம் மாந்தி
மருள் கெட அறிவன் திட்டி வைத்த சித்திரமே ஒத்த. 37

2068 வீணை கை வழுக்கிச் சோர்வார் சிலர் சிலர் விரல் நடாத்தும்
யாணர் அம்பு எழலும் கண்டத்து எழாலும் வேறு ஆக வேர்ப்பர்
நாண மோடு உவகை தள்ள நாத்தலை நடுங்கித் தங்கள்
மாண் இழை அவர் மேல் வீழ் வார் விஞ்சையர் மயங்கிச் சில்லோர். 38

2069 போது உளான் பரமன் பாதப் போது உளான் ஆனான் வேலை
மீது உளான் பரமானந்த வேலை மீது உள்ளான் ஆனான்
தாது உளாங் கமலக் கண்போல் சதமகன் உடலம் எல்லாம்
காது உளான் அல்லேன் என்றான் கண் உளான் கானம் கேட்டு. 39

2070 முனிவரும் தவத்தர் ஆதி முத்தர் மாசித்தர் அன்பன்
துனி வரும் பழங்கண் தீர்ப்பான் சுந்தரத் தோன்றல் கீதம்
கனிவரும் கருணை என்னும் கடலில் அன்பு என்னும் ஆற்றில்
பனி வரும் கண்ணீர் வெள்ளம் பாய்ந்திட இன்பத்து ஆழ்ந்தார். 40

2071 ஊதி வேறு ஒதுங்கித் துன்ப உவரியுள் குளித்தார் தம்மில்
கூடிவேறு அற்ற இன்பக் குளிர் கடல் வெள்ளத்து ஆழ்ந்தார்
நாடி வேறு இடைப் பிரிந்தார் மேல் மனம் நடாத்தி மேனி
வாடி வேள் அலைப்பச் சோர்ந்து மம்மர் நோய் உழந்தார் மண்ணோர். 41

2072 பைத் தலை விடவாய் நகம் பல் பொறி மஞ்ஞை நால்வாய்
மத்தமான் அரிமான் புல்வாய் வல்லிய மருட்கை எய்தித்
தத்தமாறு அறியாவாகி தலைத்தலை மயங்கிச் சோர
இத்தகை மாவும் புள்ளும் இசை வலைப் பட்ட அம்ம. 42

2073 வன்தரை கிழிய வீழ்போய் வான் சினை கரிந்து நின்ற
ஒன்றறி மரங்கள் எல்லாம் செவி அறி உடைய ஆகி
மென்தளிர் ஈன்று போது விரிந்து கண் நீரும் சோர
நன்று அறி மாந்தர் போல நகை முகம் மலர்ந்த மாதோ. 43

2074 வாழிய உலகின் வானோர் மனிதர் புள் விலங்கு மற்றும்
ஆழிய கரணம் எல்லாம் அசைவு அற அடங்க ஐயன்
ஏழ் இசை மயமே ஆகி இருந்தன உணர்ந்தோர் உள்ளம்
ஊழியில் ஒருவன் தாள் புக்கு ஒடுங்கிய தன்மை ஒத்த. 44

2075 கண் நிறை நுதலோன் சாம கண்டத்தின் எழுந்த முல்லைப்
பண் நிறை தேவ கீதம் சரா சர உயிரும் பாரும்
விண் நிறை திசைகள் எட்டும் விழுங்கித் தன் மயமே ஆக்கி
உள் நிறை உயிரும் மெய்யும் உருக்கிய இசை வல்லானை. 45

2076 சிந்தை தோயும் ஐம் பொறிகளும் செவிகளாப் புலன்கள்
ஐந்தும் ஓசையா இசைவலான் இருந்தனன் ஆகப்
பந்த நான்மறை நாவினால் பத்திரன் ஆளாய்
வந்து பாடினார் இந்தனச் சுமையொடு மறைந்தார். 46

2077 யான் அறிந்த சாதாரி அன்று இம்பருள் இதனை
நான் அறிந்தது என்று ஒருவரும் நவின்றிலர் தேவ
கான மீது அவற்கு உணர்த்தினோன் கடவுளே அன்றி
ஏனை மானுடர் வல்லரோ இது வியப்பு என்னா. 47

2078 இழுக்கி விட்ட இக் கிழமகன் இசை இதேல் அந்த
வழுக்கு இல் பத்திரன் பாதல் எற்றோ என மதியா
அழுக்கம் உற்று எழுந்து இசைவலான் அடுத்த தன் பண்டர்
குழுக்களும் குலை குலைந்திட இருள் வழிக் கொண்டான். 48

2079 மடக்கு பல் கலைக் பேழையும் அணிக்கலம் பிறவும்
அடக்கும் பேழையும் கருவியாழ்க் கோலும் ஆங்கே ஆங்கே
கிடக்க மானமும் அச்சமும் கிளர்ந்து முன் ஈர்த்து
நடக்க உத்தர திசைக்கணே நாடினான் நடந்தான். 49

2080 சிவிகை ஓர் வழி விறலியர் ஓர் வழி செல்லக்
கவிகை ஓர் வழி கற்பவர் ஓர்வழி கடுகக்
குவிகை ஏவலர் ஒருவழி கூட நாண் உள்ளத்
தவிகை யோ வரும் ஒருவழி அகன்றிட அகன்றான். 50

2081 அன்று பத்திரன் கனவில் வந்து அடல் ஏற்று அழகர்
இன்று பத்திர இசைவலான் இடை விறகு ஆளாய்ச்
சென்று பத்திரன் அடிமையாம் என்று பாண்செய்து
வென்று பத்திரம் செய்து நின் வேண்டுகோள் என்றார். 51

2082 குஞ்சி நாள் மலர் கொன்றையார் அங்ஙனம் கூறும்
நெஞ்சினான் இனைப் பரிய சொல் கேட்டலும் நெஞ்சம்
அஞ்சினான் இது செய்யவோ அடியனேன் மறைகள்
கெஞ்சினாரை இன்று இரந்த வாறு என்று கண் விழித்தான். 52

2083 கண் மலர்ந்து எழு பத்திரன் கரை இலா உவகை
உண் மலர்ந்து எழும் அன்பு கொண்டு ஊக்க வெம்கதிரோன்
விண்மலர்ந்து எழு முன்பு போய் விசும்பு இழி கோயில்

பண் மலர்ந்த நான் மறைப் பொருள் அடித்தலம் பணிந்தான். 53

2084 கடிய கானகம் புகுதவோ கட்டிய விறகை
முடியில் ஏற்றவோ முண்டகத்தாள்கள் நொந்திட வந்து
அடியனேன் பொருட்டு அடாதசொல் பகரவோ வஞ்சக்
கொடியனேன் குறை இரந்தவா விளைந்ததே குற்றம். 54

2085 நெடிய னேன் முதல் வானவர் நெஞ்சமும் சுருதி
முடியன் ஏகமும் கடந்த நின் முண்டகப் பாதம்
செடியனேன் பொருட்டாக இச் சேண் நிலம் தோய்ந்த
அடியனேற்கு எளிது ஆயதோ ஐய நின் பெருமை. 55

2086 நாத அந்தமும் கடந்த மெய்ஞ் ஞான ஆனந்த
போதம் என்பர் அஃது இன்று ஒரு புடவி மானுடமாய்
ஆதபம் தெற வெறிந்த இந்தனம் சுமந்து அடியேன்
பேதை அன்பு அளவு ஆயதோ பெரும நின் உருவம். 56

2087 மறிந்த தெண் திரை கிடந்தவன் உந்தியில் வந்தோன்
அறிந்த அன்று அரும் பொருள் வரம்பு அகன்று எழுவிசும்பும்
செறிந்த அண்டமும் கடந்தது சிறியனேன் பொருட்டாத்
தறிந்த இந்தனம் சுமந்ததோ தம்பிரான் முடியே. 57

2088 என்ன வந்தனை செய்து நின்று ஏத்தி அம் கயல் கண்
மின் அமர்ந்த பங்கு ஒருவனை வலம் கொடு மீண்டு
மன்னர் தம்பிரான் ஆகிய வரகுண தேவன்
தன்னை வந்து அடி பணிந்தனன் தந்திரிக் கிழவோன். 58

2089 வந்த ஏழ் இசைத் தலைமகன் வரவு அறிந்து அரசன்
அந்த ஏழ் இசைக் கிழவனை அழை என உழை யோர்
பந்த யாழ் மகன் இருக்கை போய்ப் பார்த்தனர் காணார்
சிந்தை ஆகுலம் அடைந்தவன் போனவா தெரியார். 59

2090 எங்கு உளான் எனத் தேடுவார் இவர் எதிர் அயல்வாய்
அங்கு உளார் சிலர் அறிந்த வாறு அறைகுவார் அவன் நேற்று
இங்கு உளான் விறகு எடுத்து ஒரு முது மகன் இவன் பால்
பொங்கும் ஏழ் இசைப் பத்திரன் அடிமையாய்ப் போந்தான். 60

2091 பாடினான் பின்பு பட்டது தெரிகிலேம் பானாள்
ஓடினான் எனக் கேட்டலும் ஒற்றர் போய்க் கொற்றம்
சூடினான் அவை அடைந்தவர் சொல்லிய வாறே
ஆடினார் வியப்படைந்து அனுமானம் உற்று அரசன். 61

2092 தன் அடைந்த அத் தந்திரித் தலைவனை நோக்கி
என்னவாறு அவன் போனவாறு இங்கு இனும் போன

பின்னை யாது நீ செய்தனை என இசைப் பெருமான்
தென்னர் கோன் அடி தொழுது தன் செய்தியை மொழிவான். 62

2093 நென்னல்வாய் அடியேன் நினது தாள் நிழல் நீங்கிப்
பின்னல் வார் சடை மௌலி எம் பிரான் அடி பணிந்தேன்
இன்னலார் குறை இரந்து மீண்டு இருக்கை புக்கு இருந்தேன்
கன்னலார் மொழி பங்கர் என் கனவில் வந்து அருளி. 63

2094 ஓடி உன் பொருட்டாக நாம் விறகு எடுத்து உழன்று
வாடி நின் பகைப் புறம் கடை வந்து சாதாரி
பாடி வென்று நின் பகைவனைத் துரந்தனம் எனச் சொல்
ஆடினார் விழித்தேன் இது நிகழ்ந்தது என்று அறைந்தான். 64

2095 ஏவல் மைந்தர் போய் விளங்கி வந்து இசைத்தலும் வீணைக்
காவலன் கனா நிகழ்ச்சியும் ஒத்தலில் கைக்கும்
பூ அலங்கலான் இஃது நம் பொன் நகர்க் கூடல்
தேவர் தம்பிரான் திரு விளையாட்டு எனத் தௌ◌ந்தான். 65

2096 இகழ்ந்த கூற்று எறி சேவடிக்கு இடை அறா நேயம்
திகழ்ந்த பத்திரன் அன்பையும் தேவரைக் காப்பான்
அகழ்ந்த ஆழி நஞ்சு உண்டவன் அருளையும் வியந்து
புகழ்ந்து போய் மதுரா புரிப் புனிதனைப் பணியா. 66

2097 பத்தர் யாழ் இசைக் கிழவனைப் பனைக்கை மான் எருத்தில்
வைத்து மாட நீள் நகர் வலம் செய்வித்து மலர்ந்த
சித்தம் ஆழ்ந்திட வரிசை கண் மிதப்புறச் செய்து
தத்து மான் தொடை தேரினான் தன் மனை புகுவான். 67

2098 தேவரும் தவமுனிவரும் தேவரில் சிறந்தோர்
யாவரும் தமக்கு ஆத் செய இருப்பவர் இருதாள்
நோவ வந்து உமக்கு ஆட் செய்து நும் குறை முடித்தார்
அவரேல் உமக்கு அனைவரும் ஏவலர் அன்றோ. 68

2099 ஆதலால் எனக்கு உடையார் நீர் உமக்கு நான் அடியேன்
ஈதலால் எனக்கும் உமக்குமொடு வழக்கு வேறிலை நான்
ஓதல் ஆவது ஒர் குறை உளது இன்று தொட்டு உமக்கு
வேத நாதனைப் பாடலே கடான் என விடுத்தான். 69

2100 அரசன் நல்கிய வெறுக்கை பூண் ஆடைகள் பிறவும்
பரசு நாவலர் மாணவர் யாவர்க்கும் பகிர்ந்து
வரிசையால் இசைக் கிளையொடு மனையில் வந்து எய்திக்
கரை செயா மகிழ் சிறந்து இசைக் காவலன் இருந்தான்.

விறகு விற்ற படலம் சுபம் ------

---------------------

## 42. திருமுகம் கொடுத்த படலம் (2101 - 2130)

2101 முன்னவன் மதுரை மூதுர் முழுமுதல் இசைவலானை
இன்னிசை பாடி வென்றது இன் உரை செய்தேம் அந்தத்
தென்னவன் சேரன் மாடே திருமுகம் கொடுத்துப் பாணர்
மன்னவன் தனக்கு செம் பொன் வழங்கிய வழக்கம் சொல்வாம். 1

2102 இனி மதி எமக்கு ஈது என்னா யாழ் வல்லோன் அன்று தொட்டுப்
பனி மதி மருமான் கோயில் பாண் இசைக் கிழமை நீத்துக்
குனிமதி மிலைந்த நாதன் கோயில் முப்போதும் எய்திக்
கனிமதி அன்பில் பாடும் கடப்படு நியமம் பூண்டான். 2

2103 இத் தொழில் அன்றி வேறு தொழில் இவற்கு இன்மையாலே
பத்திரன் இலம்பாது எய்த பொறுப்பரோ பழனக் கூடல்
சித்தவெம் அடிகள் வேந்தன் பொன்னறைச் செல்வம் வெளவிப்
பத்தர் யாழ் இடத் தோள் ஏந்திப் பாடுவான் காணவைப்பார். 3

2104 சில பொலம் காசு சில் நாள் மணிக்கலன் சில நாள் செம்பொன்
கலைவகை சில் நாள் அம்பொன் சாமரைக் காம்பு சில் நாள்
அலர்கதிர் அரிமான் சேக்கை ஆடகத்தகடு சில் நாள்
குலமணி வருக்கம் சில் நாள் கொடுத்திடக் கொண்டு போவான். 4

2105 கைவரும் பொருளைத் தந்த கள்வரும் தானும் அன்றி
எவ் எவர் தமக்கும் தோற்றாது எரியில் இட்டு அழித்தும் சின்னம்
செய்வன செய்தும் தன்னைச் சேர்ந்தவர் இரந்தோர் கைபார்த்து
உய்பவர் பிறர்க்கு மாறாது உதவி உள் கவலை தீர்ப்பான். 5

2106 வைகலும் கொடுப்போர் பின் நாள் மறுத்தனர் ஆகப் போய்ப் போய்க்
கை தொழுது இறைஞ்சி வாளா வரும் அவன் கலியின் மூழ்கி
உய் வகை வேறு காணாது ஒக்கலும் ஒக்க வாடிக்
கையறாவு அடைய நோனாது உறங்கினான் கனவின் எல்லை. 6

2107 சித்த எம் பெருமான் வந்து செப்புவார் அப்பா நிம்பத்
தொத்தவன் கோசம் தன்னில் தும்பி உண் கனியின் வெளவி
இத்தனம் இன்று காறும் ஈந்தனம் எம்பால் அன்பு
வைத்தவன் அறிந்தால் சங்கை மனத்தன் ஆய் விகற்பம் கொள்வான். 7

2108 மயல் அறக் கற்புக் காக்கும் மகளிர் போல் துறவு காக்க
முயலும் யோகரில் உட்காப்பு முரசு எறி புறம் சூழ் காப்பும்
கயல் இலச்சினையும் நிற்கக் கவர்ந்த அற்புதம் இக் கள்வன்
உயிர் தொறும் ஒளித்து நின்ற ஒருவனோ வறியேன் என்பான். 8

2109 கோமகன் இனைய செய்தி அறியும் மேல் கோசம் காப்போர்க்
காமுறு தண்ட நின் போல் அன்பகத்து எம்மை வைத்த
தேம் மரு போந்தின் கண்ணிச் சேரமான் தனக்கு இப்போது
நாம் ஒரு முடங்கல் தீட்டி நல்குவம் போதி என்னா. 9

2110 மறைக்கு உரை செய்த வாக்கான் 'மதி மலி புரிசை' என்னும்
சிறப்பு இயல் சீர்சால் செய்யுள் பாசுரம் செப்பித் தீட்டிப்
பிறைச் சடைப் பெருமான் நல்கி மறைந்தனன் பெரும்பாண் செல்வன்
உறக்கம் நீத்து ஆடிப் பாடி உவகை மாக் கடலில் ஆழ்ந்தான். 10

2111 வாங்கிய திருமுகம் மணிப் பட்டாடை இட்டு
ஆங்கு இறை அடிபணிந்து அகன்று பத்திரன்
ஓங்கிய கோயிலை வலம் கொண்டு ஒல்லென
நீங்கி மேல் வரைப் புல நெறிக் கொண்டு ஏகுவான். 11

2112 கொல்லையும் குறிஞ்சியும் கொதிக்கும் வெம் பரல்
கல்லதர் அத்தமும் கடந்து முள் புறப்
பல் சுளைக் கனி அடி இடறப் பைப் பைய
நல் வளம் கெழு மலை நாடு நண்ணினான். 12

2113 அலைகடல் நெடும் துகில் அந்த நாடு எனும்
தலைமகள் தனக்கு வான் தடவு குன்று பூண்
முலை என விளங்கின முகத்தில் தீட்டிய
திலகமே ஆனது திரு வஞ்சைக் களம். 13

2114 அறமகள் ஆக்கமும் மலரின் மேய செம்
நிறமகள் ஆக்கமும் நீதி சான்ற போர்
மற மகள் ஆக்கமும் வடசொல் தென் கலைத்
திறமகள் ஆக்கமும் சிறந்தது அந்நகர். 14

2115 மண் புகழ் அந் நகர் மறுகின் மாது ஒரு
தண் புனல் சாலையில் சார்ந்து உளான் இப்பால்
விண் புகழ் நீதி அவ் வேந்தற்கு அன்றி இராக்
கண்புனை நுதலினார் கனவில் தோன்றினார். 15

2116 தென்னவன் மதுரையில் இருக்கும் சித்தர் யாம்
நின் இடை வந்துளே நின்னைக் கண்டு தான்
நன் நிதி வேண்ட நம் ஓலை கொண்டு நம்
இன்னிசைப் பாண பத்திரன் இங்கு எய்தினான். 16

2117 மற்று அவற்கு அருநிதி கொடுத்து மன்ன நீ
தெற்று என வரவிடுக என்று சித்தர் தாம்
சொற்றனர் போயினார் சுரக்கும் தண் அளி

ஒற்றை வெண் குடையினான் உறக்கம் நீங்கினான். 17

2118 கங்குல்வாய் கண்ட அக் கனவைப் பெண்ணை அம்
தொங்கலான் தமரொடு சொல்லிச் சேல் கண்ணாள்
பங்கினாள் திருமுகம் கொணர்ந்த பத்திரன்
எங்கு உளான் கொல் எனத் தேட எண்ணுவான். 18

2119 மற்று அவர் தமைத் துரீஇ வருக இல் லெனக்
கொற்றவன் ஏவலோர் குறுகி மாடமும்
தெற்றியும் நியமமும் மன்றும் சென்று சென்று
எல்திகழ் மணி நகர் எங்கும் தேடுவார். 19

2120 தரும நீர்ப் பந்தரில் இருக்கும் தந்திரி
வரும் இசைக் கிழவனைக்கண்டு வல்லை போய்த்
திரு மகற்கு உணர்த்தினர் சேனை யோடு எழீப்
பெருமகன் பாணர்தம் பிரானை நண்ணினான். 20

2121 கண்டனன் முகிழ்த்த கைக் கமலம் சென்னி மேல்
கொண்டனன் பாடினன் கூத்தும் ஆடினன்
தண்டு என வீழ்ந்தனன் பின் தண் நறா
வண்டு என மகிழ்ந்தனன் மன்னர் மன்னனே. 21

2122 வாங்கினன் திருமுகம் மலர்க்கண் ஒற்றினன்
தாங்கினன் முடிமிசைத் தாமம் போல் மகிழ்
தூங்கினன் தடம் கணீர் துளிப்ப மெய் எல்லாம்
வீங்கினன் பொடிப்பு எழ வேந்தர் வேந்தனே. 22

2123 மின் அவிரும் செம் பொன் மணி மாடக் கூடல் மேய
சிவன் யாம் எழுதி விடுக்கும் மாற்றம்
நன்னர் முகில் எனப் புலவர்க்கு உதவும் சேர நரபாலன்
காண்க தன் போல் நம்பால் அன்பன்
இன் இசை யாழ்ப் பத்திரன் தன் மாடே போந்தான்
இருநிதியம் கொடுத்து வர விடுப்பதுஎன்னத்
தென்னர் பிரான் திரு முகத்தின் செய்தி நோக்கிச் சேரர்
பிரான் களிப்பு எல்லை தெரியான் ஆகி. 23

2124 பொன்னின் தளிகை மிசை வைத்துப் புழைக்கை மதமான் தலை ஏற்றி
மன்னும் கொளை யாழ்ப்புலவனை முன் வைத்துப் பின்னே தான் இருந்து
மின்னும் கதிர் கால் இணைக் கவரி வீசிப் பல வேறி யங் கலிப்பத்
தென்னென் தளியார் இசைத்தார் ஆன் திருமா நகரை வலம் செய்யா. 24

2125 பஞ்சு தடவும் சீறடியார் பல மங்கலம் கொண்டு எதிர் போத
மஞ்சு தடவு நீள் குடுமி மாடாமனையில் கொடு போகி
நஞ்சு தடவு மணிகண்டன் அன்பன் தனை நன்னீர் ஆட்டி

அஞ்சு தடவி ஓவியம் செய்து அமைத்த மணி மண்டபத்து ஏற்றி. 25

2126 அம் பொன் தவிசு இட்டு அருச்சனை செய்து ஆறு சுவையின் அமுது அருத்திச்
செம்பொன் கலவை நறும் சாந்தம் தீம் பூ ஆதி முகவாசம்
பைம்பொன் கலத்து வெள் இலை தீம் பழுக்காய் பிறவும் முறை நல்கி
உம்பர்க்கு இறைவன் திருமுகத்தில் உய்ப்பது எனலால் உய்த்தும் என. 26

2127 செம் பொன் அறையைத் திறந்து அழைத்துக் காட்டி இனைய திரு எல்லாம்
உம்பர் பெருமான் அடியீர் நீர் உடையீர் கவர்ந்து கொள்மின் என
இம்பர் நிழற்றும் வெண் குடையான் இசைப்ப எதிர் தாழ்ந்து இசைக் கிழவன்
நம்பன் அருளுக்கு உரியீர் நீர் நல்கிற்று அமையும் எனக்கு என்ன. 27

2128 மன்னன் தான் எண்ணிய ஆற்றால் வழங்க வழங்க மறுத்து மறுத்து
இன்னல் திரும் இசைக் கிழவன் இலங்கும் பொலம் பூண் இரு நிதியம்
பொன் அம் சிவிகை கரி பரிமான் பொன் பட்டாடை பல பிறவும்
தன்ன என்னும் அளவு ஆற்றால் தானே கொள்ளத் தார் வேந்தன். 28

2129 பின்னே ஏழ் அடி சேண் சென்று பெருமை சான்ற வரிசையினால்
தன் நேரிசையான் தனை விடுத்து மீண்டான் ஆகத் தமிழ் மதுரை
மின்னேர் சடையார் இசைத் தொண்டன் தானும் மீண்டு வெயில் விரிக்கும்
பொன்னேர் மௌலி நிதிக்கிழவன் போல மதுரை நகர் புக்கான். 29

2130 வந்து மதுரைப் பெருமானை வணங்கிக் கொணர்ந்த நிதி எல்லாம்
இந்து மருமான் நகர் உள்ளார் யாவும் அறிய யாவர்க்கும்
முந்தை வேத முதல்வர்க்கும் புலவோர் தமக்கு முறை நல்கிச்
சந்த யாழின் இசைப்பாணர் தருமம் அனையான் வைகினான். 30

திருமுகம் கொடுத்த படலம் சுபம் ------
----------------

## 43. பலகை இட்ட படலம் (2131 -2148 )

2131 கருத் துழாய் முகில் ஒருபால் கலந்து அவர் பத்திரற்கு நிதி
திருந்து தார் உதியன் இடைத் திருமுகம் ஈந்து அளித்த இது
வருந்தி யாழவன் இசைப்ப மழை தூங்கு நள் இரவில்
இருந்து பாடு எனப் பலகை இட்டதூம் இனிப்பகர்வாம். 1

2132 முன்பு உடைய நாயகனை முப்போதும் புகுந்து இறைஞ்சி
இன்பு உறும் ஏழ் இசைக் கிழவன் இரு நிதியம் அருளிய பின்
அன்பு சிறந்து அரை இரவு அடைந்து பணிந்து அடல் விடையின்
பின்புற நின்று ஏழ் இசையும் பாடி வரும் பேறு அடைவான். 2

2133 தொழும் தகை அன் பரும் தேவர் தொகுதிகளும் தொழத் திங்கள்
கொழுந்து அலைய நதி அலையக் குனிக்கின்ற தனிக் கடவுள்

செழும் தரளச் சிவிகையின் மேல் தேவி திருப் பள்ளி யறைக்கு
எழுந்து அருளும் போது பணிந்து ஏத்துவான் ஓர் இரவில். 3

2134 இன்னிசை யாழ்ப் பெரும் பாணன் எவ் இடையூறு அடுத்தாலும்
தன் நியம நெறி ஒழுக்கம் தவான் என்பது உலகு அறியப்
பொன் இயலும் சடை மௌலிப் புராணர் திருவிளை யாட்டால்
அன்னிலையில் கரும்கொண்மூ ஆர்த்து எழுந்த திசை எல்லாம். 4

2135 தடித்து நிரை புடை பரப்பித் தடுமாறி திசை மயங்கத்
துடித்து விடவாய் அரவம் சோர்ந்து சுருண்டு அளை ஒதுங்க
இடித்து உடுவின் கணம் புதைப்ப இருள் கான்று சலபதி முன்
முடிதிடுவான் வரவிடுத்த முகல் ஏழும் வளைந்த என. 5

2136 கரும் கடலை விசும்பு எடுத்துக் கவிப்பது என வெண் தாரை
நெருங்கி இருளின் இருப்புக் கோன் நிரைத்த என நிறம் கருக
ஒருங்கு சொரிந்து உள் உணரார் உள்ளம் போல் உள் புறம்பு
மருங் கொடு கீழ் மேல் என்று தெரியாத மயங்கு இருள்வாய். 6

2137 மா மாரி இடை நனைந்து வருவானம் மாரி தனைப்
பூ மாரி என நினைந்து திருக்கோயில் புகுந்து எய்திக்
காமாரி தனைப் பணிந்து கருணை மாரியின் நனைந்து
தே மாரி பொழிவது எனத் தௌ¢ விளி யாழ் வாசிப்பான். 7

2138 விடைக் கடவுள் பின்னின்று வீணை இடத் தோள் கிடத்திப்
புடைத்து நரம்பு எறிந்து மிடற்று ஒலி போக்கிப் பொலம் கொன்றைச்
சடைக் கடவுள் செவி வழிபோய் அருள் பைங் கூழ் தலை எடுப்பத்
தொடைத் தமிழின் இசைப் பாணிச் சுவை அமுத மடைதிறந்து. 8

2139 நரம்பு நனைந்து இசை மழுங்க நனைந்து உடலம் பனிப்ப இசை
வரம்பு ஒழுகு விரல் விறைத்து வலி வாங்க மயிர் சிலிர்ப்ப
நிரம்பிய சேறு அடிபுதைப்ப நின்று நிறை அன்பின் இசையாய்
அரும்புதல் போல் என்பு உருக்கும் அமுத இசை பாடும் ஆல். 9

2140 மாதர் நகையாய் மதுரேசர் உண் பலிக்கு எம் மனைவாய் வந்து
காதன் முகத்து அரும்பிக் காட்டி என் சிந்தை கவர்ந்தார் போலும்
காதன் முகத்து அரும்பக் கையறவு தீரக் கலப்பேன் பாதி
பேதை உருவாய் இருந்தார் நாணி விழித்து ஆவி பிழைத்தேன் போலும். 10

2141 ஒண் நுதலாய் வெண் தலை கொண்டு உண் பலிக்கு
நம் மனையின் ஊடேகூடல்
கண் நுதலார் உள் ஆளக் கானம் இசைத்து என் உள்ளம்
கவர்ந்தார் போலும்
கண் நுதலார் பாடு அவி நயம் கண்டு

ஆகம் கலப்பேன் பாதி
பெண் உருவமாய் இருந்தார் வெள்கி விழித்து
ஆவி பெற்றேன் போலும். 11

2142 ஐயரி உண் கண்ணாய் திருவால வாயுடையார் ஐயம் கொள்வான்
மையன் நகை செய்து என் வனமுலையின் மேல் செம் கைவைத்தார் போலும்
மைய நகை செய்வது என் வனமுலை மேல் கை வைப்ப மாழ்கிச் சோர்வேன்
தையல் இடம் கண்டு நடு நடுங்கி விழித்து ஆவி தரித்தேன் போலும். 12

2143 பாடுவார் இருவர்க்கு அன்று பரிசிலாக் கொடுத்த சங்கத்
தோடுவார் செவியில் ஊட்டும் தொண்டு கண்டு இதன்
மேல் நின்று பாடுவாய் உனக்கே இந்தப் பலகை என்று ஆழ்ந்த அன்பின்
நாடுவார் விசும்பில் கூறி நகை மணிப் பலகை இட்டார். 13

2144 இறை அருள் ஆணை அஞ்சி இட்ட பொன் பலகை ஏறி
நறை கெழு மதுர கீதம் பாடி நான் மறைகள் சூடும்
அறை கழல் அகத்து உட்கொண்டு பலகையும் அம் கை கொண்டு
மறை வழி யாழ் வல்லோன் தன் மனைவயின் செல்லும் எல்லை. 14

2145 மின்னுமா மேகம் நீங்கி விசும்புவாய் விளங்கித் தென்றல்
மன்னு மா மலய மேய மாதவன் குடித்த வைகல்
பொன்னு மா மணியும் முத்தும் புலப்படக் கிடந்த வேலை
என்ன மீன் விளங்கித் தோன்ற ஏகி இல் புகுந்தான் இப்பால். 15

2146 பாய் இருள் படலம் கீண்டு பரிதி கண் விழித்துச் செம் கை
ஆயிரம் பரப்பி முந்நீர் அலைகடல் நீந்தும் எல்லை
மாயிரு ஞாலம் காக்கும் வரகுணன் இரவு தங்கள்
நாயகன் பாடற்கு ஈந்த நல் அருள் பரிசில் கேட்டான். 16

2147 இன்னிசைக்கு அரசை இட்ட பலகை மீது இருத்தி மன்னர்
மன்னவன் இவனே எங்கள் மதுரை நாயகன் என்று உன்னி
மின்னிவர் மணிப்பூண் நல்கி விளை நில மிகவும் நல்கி
நன்னிதி வெறுப்ப நல்கி வரிசையான் நடாத்தி வந்தான். 17

2148 இறை அருள் வரிசை பெற்ற பத்திரனும் மேறு
உயர்த்தவரை நாற்போதும்
முறையினால் வழிபட்டு ஒழுகுவான் ஆக
முடிகெழு வரகுண வேந்து
மறை முதல் அடிகள் வந்து வந்தனையால்
வழுத்துவான் சில் பகல் கழிய
நிறை பெரும் சுடரோன் திரு உரு அடைந்து
நெறியினால் சிவபுரம் அடைந்தான்.

பலகை இட்ட படலம் சுபம் ------

--------------

## 44. இசைவாது வென்ற படலம் (2149 - 2192)

2149 கூடல் அம் பதியில் ஆடக மேருக் கொடிய வில்குரிசில் அடியவனுக்குப்
பாடலின் பரிசில் ஆகிய செம் பொன் பலகை இட்டபடி பாடின மன்னான்
வீடரும் பொருவில் கற்புடையாள் ஓர் விறலி யைப் பரமன் இறை அருள் பற்றி
மாடகம் செறியும் யாழ் வழி பாதி வாது வென்ற வரலாறு இசைப்பாம். 1

2150 வரகுணன் கதி அடைந்தபின் அம் பொன் மௌலி சூடிய இராச ராசப்
புரவலன் புவி மடந்தையை வேட்டுப் புயம் தழீஇக் கொடு நயம் தரு நாளில்
பரவு மன்பதை புரந்து ஒழுகும் அந்தப் பஞ்சவற்கு உரிய அஞ்சன உண்கண்
மரபின் வந்த மடவார் பலர் ஏனை மையல் செய்யும் மடவார் பலர் மாதோ. 2

2151 அன்ன போக மடாவாருள் ஒருத்தி அரசனுக்கு அமுதும் ஆவியும் ஆகும்
மின்னலாள் மதுர கீதம் இசைக்கும் விஞ்சையின் துறை வலாளவளுக்கும்
பன்னக ஆபரணன் இன்னிசை பாடும் பத்திரன் பொருவில் கற்புடை யாட்கும்
மன்னு கீத வினையால் இதன் மூள வழுதி காதல் மடமாது பொறாளாய். 3

2152 பாடினிக்கு எதிர் ஓர் பாடினி தன்னைப் பாட விட்டிவள் படைத்த செருக்கை
ஈடழிப்பல் என எண்ணி எழீத் தன் இறை மகற்கு அஃது இசைத்தலும் அந்தத்
தோடிறப் பொருகயல் கணி நாடகன் சொன்ன வாறு ஒழுகு மன்னவர் மன்னன்
நாடி அத்தகைய விறலியை ஈழ நாட்டினும் வர வழைத்து விடுத்தான். 4

2153 பந்தயாழ் முதுகு தைவர விட்டுப் பாட லயம்
இரு பக்கமும் மொய்ப்ப
வந்த பாடினி மடந்தையும் மன்னர் மன்னனைத்
தொழுது ஓர் கின்னர மாதின்
சந்த ஏழிசை மிழற்றினாள் தன்னை நோக்கி
ஒருமின்னிடையாள் மேல்
சிந்தைபோக்கி வரு தீப்பழி நோக்காத் தென்னருக்க
அரசன் இன்னது செப்பும். 5

2154 பத்திரன் மனைவி தன்னை எம் முன்னர்ப் பாடுதற்கு
அழை அதற்கு அவள் ஆற்றாது
உத்தரம் சொலினும் யாம் அவள் சார்பாய் உனை
விலக்கினும் விடாது தொடர்ந்தே
சித்தம் நாணம் உற வஞ்சினம் இட்டுச் செல்லல் நில்
என வளைந்து கொள் என்னா
எய்த்த நுண் இடையினாளை இருக்கைக்கு ஏகி நாளை
வருக என்று விடுத்தான். 6

2155 பின்னர் இன்னிசைப் பத்திரன் பெருந்தகை விறலி
தன்னை அங்கு அழைத்து உளத்து ஒன்று புறத்து ஒன்று சாற்றும்
என்னோடு இன்னிசைப் பாடுவார் உளர் கொலோ இங்கு என்று

உன்னி வந்து இருக்கின்றனள் இசைவலால் ஒருத்தி. 7

2156 ஆடு அமைத் தடம் தோளினாய் அவளடும் கூடப்
பாட வல்லையோ பகர் எனப் பாடினி பகர்வாள்
கோடரும் தகைக் கற்பும் இக் கூடல் எம் பெருமான்
வீடரும் கருணையும் எனக்கு இருக்கையால் வேந்தே. 8

2157 பாடி வெல்வதே அன்றி நான் பரிபவம் உழந்து
வாடுவேன் அலேன் என்று உரை வழங்கலும் மதுக்கால்
ஏடு வார்குழல் அவளையும் இருக்கை உய்த்து இருந்தான்
நீடு வார் திரைப் பொருனை அம் தண் துறை நிருபன். 9

2158 மற்றை வைகல் அவ் இருவரைப் பஞ்சவன் மதுரைக்
கொற்றவன் தன் அவை இடை அழைத்து நேர் குட்டிக்
கற்ற ஏழ் இசை கேட்கு முன் கலத்தினும் போந்த
வெற்றி வேல் மதர் நெடும் கணாள் விறலியை வைதாள். 10

2159 குற்றம் எத்தனை எத்தனை குணங்கள் யாழ்க் கோலுக்கு
உற்ற தெய்வம் ஏது இசைப்பது எவ் உயிர் உடம்பு உயிர் மெய்
பெற்ற ஓசை எவ் அளவைக்கு உத்தரம் பேசி
மற்ரு என்னோடு பாடில்லையேல் வசை உனக்கு என்றாள். 11

2160 இருமையும் பெறு கற்பினால் இயம்புவாள் கலத்தின்
வரும் அரும் பெறற் கல்வியும் வாதின் மேல் ஊக்கப்
பெருமையும் பலர் விரும்புறு பெண்மையின் செருக்கும்
திருமகன் சபை அறியவாய் திறக்க வேண்டாவோ. 12

2161 நெய் உண் பூம் குழல் மடவரான் இன்னொடும் வாது
செய்யும் பூசலுக்கு எதிர் அலால் தீயவாய் திறந்து
வையும் பூசலுக்கு எதிரலேன் மானம் விற்று உன் போல்
உய்யும் பாவையரே அதற்கு எதிர் என உரைத்தாள். 13

2162 வென்றி மீனவன் விலக்குவான் போல் எதிர் விலக்கித்
துன்று தார் குழல் மடந்தை மீர் பாடுமின் தோற்றோர்
வென்ற மாதரார்க்கு அடிமையாய் விடுவதே சபதம்
என்று மானம் உண்டாக்கலும் ஈழ காட்டு அரிவை. 14

2163 முந்தி யாழ் இடம் தழீஇக் குரல் வழி முகிழ் விரல் போய்
உந்தவே பெருமித நகை உள் கிடந்து அரும்பச்
சந்த ஏழ் இசை இறை மகன் தாழ் செவிக்கு அன்பு
வந்த காதலால் மழையின் அமுது என ஆர்த்தாள். 15

2164 வீணை வாங்கினள் மாடகம் முறுக்கினள் விசித்து
வாண் நரம்பு எறிந்து இரு செவி மடுத்தனர் இயக்கர்

நாண மெல் விரல் நடை வழி நாவிளை அமுதம்
பாணர் கோமகன் விறலியும் பலர் செவி நிறைத்தாள். 16

2165 அரசன் உட்கிடை அறிந்திலர் அவைக் களத்து உள்ளார்
விரைசெய் வார் குழல் பாடினி பாடலை வியந்தார்
புரைசை மானிரைப் பூழியன் இலங்கையில் போந்த
வரை செய் குங்குமக் கொங்கையாள் பாடலை மகிழ்ந்தான். 17

2166 தென்னவன் உள் கோள் எல்லை தெரிந்தனர் வையத்து உள்ளார்
அன்னவன் புகழ்ந்த வாறே புகழ்ந்தனர் அவளைத் தானே
முன்னவன் அருளைப் பெற்று மும்மையும் துறந்தோர் ஏனும்
மன்னவன் சொன்னவாறே சொல்வது வழக்காறு அன்றோ. 18

2167 பொன் தளிர் அனையாள் மையல் புதுமது நுகர்ந்து தீது
நன்று அறியாத கன்னி நாடவன் அனவையை நோக்கி
இன்று ஒரு நாளில் தேரத் தக்கதோ இது என்று அந்த
வென்று அடு வேல் கணாரைப் போம் என விடுத்தான் மன்னோ. 19

2168 மருவிய ஆயம் ஏத்த விருந்தினாள் மனைவந்து எய்திப்
புரவலன் தனது பாட்டைப் புகழ்ந்ததே புகந்தது ஆகப்
பெருமிதம் தலைக் கொண்டாள் அப் பெரும் களிப்பு அடைந்து மஞ்சத்து
திரு மலர் அணை மேலார் வந்து இளைத்து இனிது இருந்தாள் இப்பால். 20

2169 வணங்கு உறு மருங்கில் கற்பின் மடவரல் மதங்கி தானும்
அணங்கு இறை கொண்ட நெஞ்சன் அம் கயல் கண்ணி பாகக்
குணம் குறி கடந்த சோதி குரை கழல் அடிக்கீழ் எய்தி
உணங்கினள் கலுழ் கண்ணீர் ஒதுங்கு நின்று இதனைச் சொன்னாள். 21

2170 தென்னவன் ஆசி வையம் செய்ய கோல் செலுத்திக் காத்த
மன்னவ வழுதி வார வழி வழக்கு உரைப்பது ஆனான்
அன்னவன் கருத்துக்கு ஏற்ப அவையரும் அனையர் ஆனார்
பின் நடு நிலைமை தூக்கிப் பேசுவார் யாவர் ஐயா. 22

2171 உன் அருள் துணை செய்து என் பால் உறு கண் நோய் துடைப்பது என்ன
மின் அனாய் நீயே நாளை வெல்லும் மா செய்தும் அஞ்சேல்
என்ன ஆகாய வாணி ஈறு இலான் அருளால் கேட்டு
மன்னரும் கற்பின் ஆடன் மனை புகுந்து இருந்தான் மன்னோ. 23

2172 அன்று போல் மற்றை ஞான்றும் அழைத்தனன் பாடல் <கேட்டுக்
குன்று போல் புயத்தான் தென்னன் கூறிய வாறே கூற
மன்று உளார் பலரும் அன்ன வண்ணமே சொன்னார் கேட்டு
நின்ற பாண் மடந்தை பாண்டி நிருபனை நோக்கிச் சொல்வாள். 24

2173 தென்னர் ஏறு அனையாய் ஞால மனு வழிச் செங்கோல் ஓச்சும்
மன்னர் ஏறு அனையாய் வார வழக்கினை ஆதலால் நீ
சொன்னவாறு அவையும் சொல்லத் துணிந்தது துலை நா அன்ன
பன்னக ஆபரணர் முன் போய்ப் பாடுகேம் பாடும் எல்லை. 25

2174 இருவரேம் பாட்டும் கேட்டுத் துணிந்து இவள் வென்றாள் என்னா
ஒருவர் சந்நிதியில் சொன்னால் போதும் என்று உரைத்தாள் பாண்டித்
திரு மகன் அனைய வாறே செய்மினீர் செய்மின் என்ன
மருவளர் குழலினார் தம் மனை புகுந்து இருந்தார் பின் நாள். 26

2175 தென்றல் நாடனும் மந்திரச் செல்வரும்
நன்று தீது உணர் நால் வகைக் கேள்வியோர்
ஒன்ற ஏகி ஒளி விடு வெள்ளி மா
மன்ற வாணர் மா மண்டபத்து எய்தினார். 27

2176 எய்தி அம் மடமாதரை இங்கு உறச்
செய்திர் என்னத் திருமகன் ஏவலோர்
நொய்தின் ஓடி நொடித்து அழைத்தா ரொடு
மை திகழ்ந்த விழியார் வருவர் ஆல். 28

2177 படிமையார் தவப் பாடினி வந்து எனக்கு
அடிமையாவள் இன்று ஐயம் இன்றால் எனக்
கொடுமையார் மனக் கோட்டச் செருக் கொடும்
கடுமையாக வந்தாள் கலத்தின் வந்தாள். 29

2178 கற்பின் மிக்கு எழு கற்பும் கருத்தினில்
சிற் பரஞ் சுடர் சேவடி மேல் வைத்த
அற்பு மிக்கு எழ மெல்ல வந்தாள் அரோ
பொற்பின் மிக்கு உள பத்திரன் பொன் அனாள். 30

2179 அலங்கு ஆ ரமோடு அங்கதம் ஆதி பல்
கலன்கள் தாங்கிக் கலைஞர் குழாத்து இடை
இலங்கு மாட மதுரைக்கு இறைவரும்
புலம் கொள் நாவலர் போல் வந்து வைகினார். 31

2180 அந்த வேந்து அவை தன்னில் அரும் கலம்
வந்த வேய்த் தடம் தோள் இசை மாதராள்
முந்த வேத்திசை பாடினாள் முந்தை யோர்
சிந்தை வேட்டு ஒன்றும் செப்பினர் இல்லை ஆல். 32

2181 வீணை தோள் இடன் ஏந்திய வெண் மலர்
வாணி பாட இருக்கையின் வைகியே

யாழ் நரம்பு எறிந்து இன்னிசை ஓர்ந்து எழீப்
பாணர் கோமகன் பன்னியும் பாடும் ஆல். 33

2182 குடங்கை நீரும் பச்சிலையும் இடுவார்க்கு இமையாக் குஞ்சரமும்
படம் கொள் பாயும் பூ அணையும் தருவாய் மதுரைப் பரமேட்டி
படம் கொள் பாயும் பூ அனையும் கையில் படுதலை கொண்டு
இடங்கள் தோறும் இரப்பாய் என்று ஏசுவார்க்கு என் பேசுவனே. 34

2183 தேனார் மொழியார் விழிவழியே செல்லாதவர்க்கே வீடு என்று
நானா வேதப் பொருள் உரைத்தாய் நீயே மதுரை நம்பரனே
நானா வேதப் பொருள் உரைத்தாய் நீயே பாதி நாரி உரு
ஆனாய் என்று பிறர் பழித்தால் அடியேன் விடை ஏது அறைவேனே. 35

2184 வரதன் ஆகி எவ் உயிர்க்கும் மாயா விருத்தி வலி அடக்கிச்
சரதம் ஆன வீட்டு இன்பம் தருவாய் மதுரைத் தனி முதலே
சரதம் ஆன வீட்டு இன்பம் தருவாய் வீடு பெறுவார் போல்
விரத யோக நிலை அடைந்தாய் என்பார்க்கு என் நான் விளம்புவனே. 36

2185 கண் நுதல் மதுரைப் பிரானை இவ்வாறு
கருதிய பாணியால் கனிந்து
பண் நுதல் பரிவட்டு அணை முதல் இசைநூல் பகர்
முதல் தொழில் இரு நான்கும்
எண் உறுவார் தல் வடித்து இடன் முதல் ஆம்
எட்டு இசைக் காரணமும் பயப்ப
மண்ணவர் செவிக்கோ வானவர் செவிக்கும்
ஆக்கினாள் விளை அமுதம். 37

2186 இடையினோடு ஏனைப் பிங்கலை இயக்கம்
இகந்து மூலம் ஒடுத்து இயக்கி
நடு உறு தொழிலால் பிரம நந்திரம் நடைபெற
இசைக்கும் உள் ஆளாம்
மிடறு வீங்காள் கண் இமைத்திடாள் எயிறு வெளிப்
படாள் புருவம் மேல் இமிராள்
கொடிறு அது துடியாள் பாடலும் அது கேட்டு
அனைவரும் குதூகலம் அடைந்தார். 38

2187 கன்னி நாடு உடையான் கைதவன் எனும்
பேர்க் காரணம் தேற்றுவான் எனத்தான்
இன்னிசை அறிஞனாகியும் முன்போல் இயம்புவான்
ஒரு படு கின்றான்
முன்னவன் அருளால் தன் மனக் கோட்ட முரண் கெடப்
பொதுமையான் நோக்கி
இன்னவள் தானே வென்றனள் என்றோன்

இனையவாறு அனைவரும் மொழிந்தார். 39

2188 கரி உரை மொழிந்த கைதவன் இலங்கைக் கைதவப் பாடினி கழுத்தில்
புரிகுழல் மாதை இருத்து என இருத்தும் போதுமை இடம் கரந்து இருந்த
அரிய நாவலர் ஈது அற்புதம் ஈது அற்புதம் என அறைந்தவை காண
விரிகதிர் மின் போல் மறைந்தனர் யாரும் வியந்தனர் பயந்தனன் வேந்தன். 40

2189 செம் கண் ஏறு அழகர் ஆடல் ஈது என்றே யாவரும் தௌ◌ந்தனர் ஏத்தி
அம் கண் நாயகர் தம் கருணையின் திறனும் அடியவர் அன்பையும் தூக்கித்
தம் கணார் அருவி பெருக ஆனந்தத் தனிப் பெரும் சலதியில் ஆழ்ந்தார்
வங்கம் மேல் வந்தாள் பிடர் மிசை இருந்த மாண் இழை விறலியை மன்னன். 41

2190 இறக்குவித்து அவட்கு முந்த முத்தாரம் எரிமணிக்
கலன் துகில் வரிசை
பெறக் கொடுத்தேனை அவட்கு உள் மகிழ்ச்சி
பெறச் சில வரிசை தந்து அவையில்
சிறக்க வந்து ஒருங்கு வைகி வான் இழிந்த தெய்வதக்
கோயில் புக்கு இருந்த
அறக் கொடி இடம் சேர் பெரும் புல வோர்க்கு
அரும் கலன் ஆதிகள் நல்கா. 42

2191 மன்னவர் வலிகள் எல்லாம் தெய்வத்தின் வலிமுன் நில்லா
அன்ன மா தெய்வம் செய்யும் வலி எலாம் அரண் மூன்று அட்ட
முன்னவன் வலிமுன் நில்லா எனப்பலர் மொழிவது எல்லாம்
இன்ன பாண் மகளிற் காணப்பட்டது என்று இறும்பூது எய்தா. 43

2192 மின் இயல் சடையினானை விடை கொடு வலம் செய்து ஏகி
இன்னியம் இயக்கம் செய்ய எழில் கொடு தன் கோயில் எய்தித்
தொல் நிதி பெற்றான் போலச் சுகுண பாண்டியனைப் பெற்று
மன்னிய மகிழ்ச்சி வீங்க வைகினானன் இராசராசன். 44

இசைவாது வென்ற படலம் சுபம் ------
----------

## 45. பன்றிக் குட்டிக்கு முலை கொடுத்த படலம் (2193- 2255)

2193 இருளைக் கந்தரத்தில் வைத்தோன் தன் இடத்து என்றும் அன்பின்
தெருளைத்தந்து அவட்கு மாறாத் தெரிவையை இசையால் வெல்ல
அருளைத் தந்து அளித்த வண்ணம் அறைந்தனம் தாயாய்ப் பன்றிக்
குருளைக்கு முலை தந்து ஆவி கொடுத்தவாறு எடுத்துச் சொல்வாம். 1

2194 முறை என இமையோர் வேண்ட முளைத்த நஞ்சாய் இன்று சான்றாய்
உறை என மிடற்றில் வைத்த உம்பரான் மதுரைக்கு ஆரம்
திறை என எறி நீர் வைகைத்து எற்கது குரு இருந்த

துறை என உளது ஓர் செல்வத் தொல் மணி மாடமூதூர். 2

2195 தரு நாதன் ஆதி வானோர் தம் குரு இருந்து நோற்பக்
குரு நாதன் எனப் பேர் பெற்றுக் கோது இலா வரம் தந்து ஏற்றில்
வருநாதன் சித்திரத் தேர் வலவனார் உடனே கஞ்சத்
திரு நாதன் பரவ வைகி இருக்கும் அச் சிறந்த ஊரில். 4

2196 சுகலன் என்று ஒரு வேளான் அவன் மனை சுகலை என்பாள்
இகல் அரும் கற்பினாள் பன்னிரு மகப் பெற்றாள் செல்வப்
புகல் அரும் செருக்கால் அன்ன புதல்வரைக் கடியார் ஆகி
அகல் அரும் களிப்பு மீதூர் அன்பினால் வளர்க்கும் நாளில். 5

2197 தந்தையும் தாயும் மாயத் தறுகண் மிக்கு உடையார் ஆகி
மைந்தரும் வேட ரோடு கூடி வெம் கானில் வந்து
வெம் தொழில் வேட்டம் செய்வார் வெயில் புகாப் புதர் கீழ் எய்தி
ஐந்து அவித்து இருந்து நோற்கும் குரவனை அங்குக் கண்டார். 6

2198 கைத்தலம் புடைத்து நக்குக் கல்லும் வெம் பாலும் வாரி
மெய்த்தவன் மெய்யில் தாக்க வீசினார் வினையை வெல்லும்
உத்தமன் விக்கம் செய்தார் தவத்தினுக்கு உவர் என்று உன்னிச்
சித்தா நொந்து இனைய வஞ்சத் தீயரைச் செயிர்த்து நோக்கா. 7

2199 தொழும் தொழில் மறந்து வேடத் தொழில் உழந்து உழல் வீர் நீர் மண்
உழும் தொழில் உடைய நீரால் பன்றியின் உதரத்து எய்திக்
கொழும் தொழில் அனைய ஏன குருளையாய்த் தந்தை தாயை
இழந்து அலம் உறுமின் என்னா இட்டனன் கடிய சாபம். 8

2200 பாவத்தை அனைய மைந்தர் பன்னிருபேரும் அஞ்சிச்
சாவத்தை ஏற்று எப்போது தணிவது இச் சாபம் என்ன
ஆவத்தை அகற்றும் ஈசன் அருள் கழல் நினைந்து வந்த
கோவத்தை முனிவு செய்தக் கடவுளர் குரவன் கூறும். 9

2201 என்னை ஆளுடைய கூடல் ஏக நாயகனே உங்கள்
அன்னையாய் முலைதந்து ஆவி அளித்து மேல் அமைச்சர் ஆக்கிப்
பின்னை ஆனந்த வீடு தரும் எனப் பெண் ஓர் பாகன்
தன்னை ஆதரித்தோன் சொன்னான் பன்னிரு தனயர் தாமும். 10

2202 தொன்மைசால் குரு இருந்த துறை அதன் புறத்த ஆன
பன்மைசால் கான வாழ்க்கைப் பன்றிகட்கு அரசாய் வைகும்
தன்மைசல் தனி ஏனத்தின் தன் பெடை வயிற்றில் சென்று
வன்மை சால் குருளை ஆகிப் பிறந்தனர் வழக்கான் மன்னோ. 11

2203 ஆன நாள் ஒருநாள் எல்லை அரசருக்கு அரசன் ஆன
மீனவன் மதுரை நீங்கி மேல் திசைக் கானம் நோக்கி

மானமா வேட்டம் செய்வான் மத்தமா உகைத்துத் தண்டாச்
சேனை தன் புறம் பே மொய்ப்பச் செல்கின்றான் செல்லும் எல்லை. 12

2204 மா வழங்கு இடங்கள் தேர வல்ல தோல் வன்கால் ஒற்றர்
பாவடிச் சுவடு பற்றிப் படர்ந்து நாறு அழல் புலால் வாய்த்
தீ விழி உழுவை ஏனம் திரி மருப்பு இரலை புல்வாய்
மேவிடம் அறிந்து வல்லே விரைந்து வந்து எதிரே சொன்னார். 13

2205 மறத்துறை வேட்ட மாக்கள் வல்லை போய் ஒடி எறிந்து
புறத்துவார் வலைகள் போக்கி நாய் அதன் புறம்பு போர்ப்ப
நிறைத்து மா ஒதுக்கி நீட்டும் படைஞராய் நிரை சூழ்ந்து நிற்ப
அறத்துறை மாறாக் கோலான் ஆனைமேல் கொண்டு நிற்ப. 14

2206 சில்லரித் துடி கோடு எங்கும் செவிடு உறச் சிலையா நிற்பப்
பல்வகைப் பார்வை காட்டிப் பயில் விளி இசையா நிற்பர்
வல்லியம் இரலை மையன் மான் இனம் வெருளா நிற்ப
வில் இற வலித்து வாங்கி மீளி வெம் கணைகள் தூர்த்தார். 15

2207 செறிந்த மான் முறிந்த தாள் சிதைந்த சென்னி செம்புனல்
பறிந்தவாறு வெள் நிணம் பரிந்து வீசு கை இறா
மறிந்த ஏழு உயர்ந்த வேழம் மாண்ட எண்கு வல்லியம்
பிறிந்த ஆவி யோடும் வாய் பிளந்தவாய் விழுந்ததே. 16

2208 தொட்ட புல் கிழங்கு வாடை தொட விரைந்து கண்ணியுள்
பட்டவும் பொறித்து வைத்த பார்வை வீழ்ந்து அடுத்தவும்
கட்டி இட்ட வலை பிழைத்து ஞமலி கௌவ நின்றவும்
மட்டிலாத ஒட்டிநின்ற மள்ளர் வேலின் மாய்ந்தவே. 17

2209 பட்டமா ஒழிந்து நின்ற மற விலங்கு பல் சில
வட்டமா வளைந்து உடுத்த வலையின் உந்தி அப்புறத்து
எட்டி நின்ற கொலை ஞர் மேல் எதிர்ந்து மீள்வ வெயில் வளைந்து
ஒட்டினாரை மலையும் மாப் பொறிக்கணங்கள் ஏத்தவே. 18

2210 வல்லியம் துளைத்து அகன்று மான் துளைத்து அகன்று வெம்
கல் இயங்கு எண்கினைத் துளத்து அகன்று கயவு வாய்
வெல் இன்பம் துளைத்து மள்ளர் விட்ட வாளி இங்ஙனம்
சொல்லினும் கடிந்து போய்த் துணித்தமா அளப்பு இல. 19

2211 மடுத்த வாளியில் பிழைத்து வலையை முட்டி அப்புறத்து
அடுத்த மானை வௌவி நாய் அலைத்து நின்ற ஆதிநாள்
உடுத்த பாசவினையினின்று உய்கு வாரை ஒய் எனத்
தடுத்த வா விளைத்து நின்ற தையலாரை ஒத்தவே. 20

2212 மதியை நேர் வகிர்ந்து கௌவி அனைய வான் மருப்பு வெங்

கதிய வேழம் மீது தாது காலு நீல முகையின் நீள்
நுதிய வேல் நுழைந்து செம் புண் நூழில் வீழு முதிர நீர்
முதிய கான வரையின் மீது மொய்த்த தீயை ஒத்தவே. 21

2213 மள்ளர் ஓசை துடியினோன் ஓசை வாளிபோய்த்
தள்ள வீழ் விலங்கின் ஓசை தப்பி ஓடும் மானின் மேல்
துள்ளு நாய் குரைக்கும் ஓசை கான மூடு தொக்கு வான்
உள் உலா உடன்று ஒலிக்கும் உருமின் ஓசை புரையுமால். 22

2214 இன்ன வேறு பல் விலங்கு எலாம் மலைத் இலங்குவேல்
மன்னர் ஏறு தென்னர் கோ மகன் குடக்கின் ஏகுவான்
அன்னபோது ஓர் ஏனம் அரசு இருக்கும் அடவி வாய்
முன்னர் ஓடி வந்து நின்று வந்த செய்தி மொழியும் ஆல். 23

2215 எங்களுக்கு அரசே கேட்டி இங்கு உள மிருகம் எல்லாம்
திங்களுக்கு அரசன் கொன்று வருகிறான் என்று செப்ப
வெம் களிப்பு அடைந்து பன்றி வேந்தனும் அடுபோர் ஆற்றச்
சங்கை உற்று எழுந்து போவான் தன் உயிர்ப் பெடையை நோக்கா. 24

2216 இன்று பாண்டியனை நேரிட்டு அரும் சமர் ஆடி வென்று
வன்திறல் வாகையோடு வருகுவன் ஏயோ அன்றிப்
பொன்றுவன் ஏயோ நீ உன் புதல்வரைப் பாதுகாத்து
நன்று இவண் இருத்தி என்ன நங்கைப் பேடு இன்ன கூறும். 25

2217 ஆவி அங்கு ஏக இந்த வாகம் இங்கு இருப்பதே இப்
பாவியோ மேல் நாள் அந்தப் பறழினை வகுத்த தெய்வம்
மாவ அமர் ஆடி வென்று வருதியேல் வருவேன் அன்றி
நீ விளிந்து இடத்து மாய்வேன் நிழலுக்கும் செயல் வேறு உண்டோ. 26

2218 போதுகம் எழுக என்னாப் பொருக்கு என எழுந்து நீலத்
தாது உறழ் எனப் பாட்டி தன் புடை தழுவிச் செல்லும்
பேது உறழ் பறழை நூக்கிப் பின் தொடர்ந்து அணைந்து செல்லக்
காது எயிற்று எறுழி வேந்தன் கால் என நடந்தான் அன்றே. 27

2219 பல் வகைக் சாதி உள்ள பன்றியில் கணங்கள் எல்லாம்
வெல் படைத் தறுங்கண் சேனை வீரராய் முன்பு செல்லச்
செல் எனத் தெழித்துச் செம் கண் தீயுக மானம் என்னும்
மல்லர் வாம் புரவி மேல் கொண்டு எழுந்தனன் வராகவீரன். 28

2220 முன்படு தூசி ஆக நடக்கின்ற முரட் கால் பன்றி
மல் படு சேனை நேரே வருகின்ற மன்னர் மன்னன்
வெற்படு தடம் தோள் வன் தாள் வீரர் மேல் சீறிச் செல்லப்
பிற்பட ஒதுங்கி வீரர் பெய்தனர் அப்பு மாரி. 29

2221 சொரிந்தன சோரி வெள்ளம் சொரிந்தன வீழ்ந்த யாக்கை
சரிந்தன குடர்கள் என்பு தகர்ந்தன வழும்பு மூளை
பரிந்தன சேனம் காகம் படர்ந்தன உயிரும் மெய்யும்
பிரிந்தன ஏன நின்ற பிறை மருப்பு ஏன வீரர். 30

2222 பதைத்தனர் எரியில் சீறிப் பஞ்சவன் படைமேல் பாய்ந்து
சிதைத்தனர் சிலரைத் தள்ளி செம்புனல் வாயில் சோர
உதைத்தனர் சிலரை வீட்டி உரம் பதை படக் கோடு ஊன்றி
வதைத்தனர் சிலரை நேரே வகிர்ந்தனர் சிலரை மாதோ. 31

2223 தாள் சிதைந்தாரும் சில்லோர் தலை சிதைந்தாரும் சில்லோர்
தோள் சிதைந்தாரும் சில்லோர் தொடை சிதைந்தாரும் சில்லோர்
வாள் சிதைந்தாரும் சில்லோர் வரை அறுத்து அலரோன் தீட்டும்
நாள் சிதைந்தாரும் சில்லோர் நராதிபன் சேனை வீரர். 32

2224 கண்டனர் கன்னி நாடு காவலன் அமைச்சர் சீற்றம்
கொண்டனர் முசல நேமி கூற்று என வீசி ஆர்த்தார்
விண்டனர் மாண்டார் சேனை வீரரும் அனைய எல்லைப்
புண் தவழ் எயிற்று வேந்தைப் புடைநின்ற பேடை நோக்கா. 33

2225 ஏவிய சேனை எல்லாம் இறந்தன இனி நாம் செய்யல்
ஆவது என் வாளா நாமும் அழிவது இங்கு என்னை தப்பிப்
போவதே கருமம் என்று புகன்ற அத் துணையை நோக்கிச்
சாவதை அஞ்சா ஏனத் தனி அரசு ஒன்று சாற்றும். 34

2226 நுண் அறிவு உடையர் ஆகி நூலொடு பழகினாலும்
பெண் அறிவு என்பது எல்லாம் பேதைமைத்து ஆதலால் உன்
கண் அறிவு உடைமைக்கு ஏற்ற காரியம் உரைத்தாய் மானம்
எண் அறிவு உடை யோர்க் எல்லா இழுக்கு உடைத்து அன்றோ ஈதால். 35

2227 தூங்கு இருள் வறுவாய்ச் சிங்கம் இரண்டு உறை துறையின் மாடோர்
ஆங்கு இரு மருப்புக் கேழல் வந்து நீர் பருகி மீளும்
வீங்கு இருள் உடல் கார் எனும் ஒன்று உறை துறையில் வீரத்து
ஆங்கு இரு மடங்கல் நீர்க்குத் தலைப்பட அஞ்சும் அன்றே. 36

2228 அத்திட மரபின் வந்து பிறந்து உளேன் ஆதலாலே
கைத்திடு தாரான் வீரம் கவர்ந்து திசை திசையும் வானும்
வைத்திட வல்லேன் அன்றி மடந்திட வல்லேன் ஆகில்
பொய்த்திடும் உடம்பே அன்றி புகழ் உடம்பு அழிவது உண்டோ. 37

2229 நீறில் எனத் தன் பெடை தன்னை நிறுத்தி நீத்து என்
கானில் என வாழ் கருமாவின் கணங்கள் எல்லாம்
ஊனில் உயிர் உண்டனம் என்று இனி ஓடல் கூடல்

கோனில் என ஆர்ப்பவன் போலக் கொதித்து நேர்ந்தான். 38

2230 நிலத்தைக் கிளைத்துப் பிலம் காட்டி நிமிர்ந்த தூள்வான்
தலத்தைப் புதைப்பத் தனியேன் வரவு நோக்கி
வலத்தைப் புகழ்ந்தான் வியந்தான் சிலைவாங்கி வாளிக்
குலத்தைச் சொரிந்தான் பொருனைத் துறைக் கொற்கை வேந்தன். 39

2231 குறித்துச் செழியன் விடு வாளியைக் கோல வேந்தன்
பறித்துச் சில வாளியை வாய் கொடு பைம்புல் என்னக்
கறித்துச் சில வாளியை கால் கொடு தேய்த்துத் தேய்த்து
முறித்துச் சில வாளியை வாலின் முறித்து நின்றான். 40

2232 மானம் பொறாது மதியின் வழி வந்த வேந்தன்
தானம் பொறாது கவிழ்க்கும் புகர்த் தந்தி கையில்
ஊனம் பொறாத முசலம் கொடுத்து ஏறி உய்த்தான்
ஏனம் பொறாது ஆர்த்து இடி யேற்றின் எழுந்தது அன்றே. 41

2233 தந்திப் பொருப்பைத் துணிக்க என்று அழன்று சீற்றம்
உந்திக் கதலிக் கொழும் தண்டு என ஊசல் கையைச்
சிந்திப் பிறைவாள் எயிறு ஓச்சித் சிறைந்து வீட்ட
முந்திக் கடும் தேர் மிசைப் பாய்ந்தனன் மூரித்தாரான். 42

2234 திண் தேர் மிசை நின்று அடல் நேமி திரித்து விட்டான்
கண்டு ஏன வேந்தன் விலக்கிக் கடும் காலில் பாய்ந்து
தண் தேர் உடையத் தகர்த்தான் பரி தன்னில் பாய்ந்து
வண்டு ஏறு தாரான் விட வேலை வலம் திரித்தான். 43

2235 சத்திப் படைமேல் விடு முன்னர்த் தறுகண் வீரன்
பத்திச் சுடர் மாமணித் தார்ப் பரிமாவின் பின் போய்
மொத்திக் குடர் செம்புனல் சோர முடுகிக் கோட்டால்
குத்திச் செகுத்தான் பொறுத்தான் அலன் கூடல் வேந்தன். 44

2236 மண்ணில் குறித்து வலிக்கண்டு வராக வேந்தை
எண்ணித் தலையில் புடைத்தான் கை இருப்புத் தண்டால்
புண்ணில் படு செம் புனல் ஆறு புடவி போர்ப்ப
விண்ணில் புகுந்தான் சுடர் கீறி விமான மேலால். 45

2237 வேனில் கிழவோனில் விளங்கி வியந்து வானோர்
தேனில் பொழி பூ மழை பெய்ய நனைந்து தெய்வக்
கானத்து அமுது உண்டு இருகாது களித்து வீர
வானத்து அமுது உண்டு அரமங்கையர் கொங்கை சேர்ந்தான். 46

2238 பின் துணை ஆய பெடைத் தனி ஏனம்

என் துணை மாய இருப்பது கற்போ
வென்றிலன் ஏனும் விசும்பு அடை வேனால்
என்று இகல் வேந்தை எதிர்த்த உருத்தே. 47

2239 விறல் நவில் பேட்டை விளிப்பது வேந்தர்க்கு
அறன் அல வென்றவன் ஆள் வினை மள்ளர்க்கு
இறை மகன் ஆன சருச்சரன் என்று ஒர்
மறமகன் நேர்ந்து அமர் ஆட வளைந்தான். 48

2240 2240. நனி பொழுது ஆட அமர் ஆடினான் நஞ்சிற்
கனி சினவன் பெடை காய்சின வேடத்
தனி மகனை தரை வீட்டி தனது ஆற்றல்
இனி இலை என்ன விளைத்து உயிர் சோர்வான். 49

2241 இரும்பு செய் தண்டினை இம் என ஓங்கிப்
பொரும் படை சென்னி புடைத்து விளிந்தான்
விருந்தினர் ஆய் இருவோரும் விமானத்து
அரும் திறல் வானம் அடைந்தனர் அன்றே. 50

2242 வன் திறல் மன்னவர் மன்னவன் உந்தன்
பொன் திகழ் மா நகர் புக்கனன் இப்பால்
பன்றி விழுந்து பருப்பதம் ஆகா
நின்றது பன்றி நெடும் கிரி என்ன. 51

2243 அன்று தொடுத்து அதனுக்கு அது பேராய்
இன்றும் வழங்குவது இம்பரின் அந்தக்
குன்றில் அரும் தவர் விஞ்சையர் கோபம்
வென்றவர் எண் இலர் வீடு உற நோற்பார். 52

2244 என்று கூறிய அரும் தமிழ்க்கு இறைவனை நோக்கித்
துன்று மாதவர் அறிவிலாச் சூகர உருவக்
குன்றின் மீது இருந்தவர் எலாம் கோதற நோற்று
நின்ற காரணம் யாது எனக் குறு முனி நிகழ்த்தும். 53

2245 வேனில் வேள் என விளங்கு விச்சாதரன் என்னும்
தான யாழ் மகன் புலத்தியன் தவத்தினுக்கு இடையூறு
ஆன பாண் செயப் பன்றியாச் சபித்தனன் அறவோன்
ஏனம் ஆகுவோன் உய்வது என்று எனக்கு என முனிவன். 54

2246 மன்னர் மன்னன் ஆம் தென்னவன் வந்து நின் வனத்தில்
துன்று பல்வகை விலங்கு எலாம் தொலைத்து உனை மாய்க்கும்
பின்னர் இவுரு பெறுக எனப் பணித்தனன் இயக்கன்
அன்னவாறு வந்து இறந்து பின் பழ உரு அடைந்தான். 55

2247 ஆய புண்ணிய விஞ்சையன் ஆகமாய்க் கிடந்த
தூய நீர் ஆதலால் அவ்வரை மீமிசைத் துறந்த
பாய கேள்வியர் இறை கொளப் பட்டது எவ் உயிர்க்கும்
நாயனார் மதுரே நயந்து அவண் உறைவார். 56

2248 என்று அகத்தியன் விடை கொடுத்து இயம்பினன் இப்பால்
பன்றி ஏற்றையும் பாட்டியும் பைம் புனத்து இட்டுச்
சென்று அவிந்தபின் பன்னிரு குருளையும் திகைப்பு உற்று
அன்று அலக்கண் உழந்தமை யார் அளந்து உரைப்பார். 57

2249 ஓடுகின்றன தெருமரல் உறுவன நிழலைத்
தேடுகின்றன தாய் முலைத் தீய பால் வேட்டு
வாடு கின்றன ஆக வெம் பசி நனி வருத்த
வீடுகின்றன வெயில் சுட வெதும்பு கின்றன ஆல். 58

2250 இன்ன வாறு இவை அணங்கு உறு எல்லை வேல் வல்ல
தென்னர் ஆகிய தேவர்கள் தேவர் அம் கயல் கண்
மின்னனாள் ஒடு மின் அவிர் விமானம் மீது ஏறி
அன்ன கானகத்து இச்சையால் ஆடல் செய்து இருந்தார். 59

2251 ஏனம் என்பறழ் உறுகண் நோய்க்கு இரங்கினார் இச்சை
ஆன அன்பு தந்து அத் துயர் அகற்றுவான் ஈன்ற
மான அன்புடைப் பெடையின் வடிவு எடுத்து அயரும்
கான வன் பறழ் கலங்கு அஞர் கலங்க நேர் வந்தார். 60

2252 கிட்டுகின்ற தம் தாய் எதிர் குட்தியும் கிட்டி
முட்டுகின்றன மோப்பன முதுகு உறத்தாவி
எட்டு கின்றன கால் விசைத் தெரிவன நிலத்தை
வெட்டு கின்றன குதிப்பன ஓடுவ மீள்வ. 61

2253 ஏனம் இன்னமும் காண்ப அரிதாகிய ஏனம்
ஆன மெய்ம் மயிர் முகிழ்த்திடத் தழுவி மோந்து அருளினன்
மான மென் முலை அருத்தி மா வலனும் வன் திறனும்
ஞானமும் பெருந் தகையும் நல் குணங்களும் நல்கா. 62

2254 துங்க மா முகம் ஒன்றுமே சூகர முகமா
அங்கம் யாவையும் மானுட ஆக்கைய ஆக்கிக்
கங்கை நாயகன் கடவுளர் நாயகன் கயல் கண்
மங்கை நாயகன் கருணை ஆம் திரு உரு மறைந்தான். 63

2255 இம்மை இப்பவத் தன்னையாய் இனிவரு பவமும்
செம்மை செய்த சேதனத்தையும் கேதனம் செய்தார்
எம்மை எப்பவத்து ஆயினும் எனைப் பல உயிர்க்கும்
அம்மை அப்பராய்க் காப்பவர் அவர் அலால் எவரே. 64

பன்றிக் குட்டிக்கு முலை கொடுத்த படலம் சுபம் ------
-------------

## 46. பன்றிக் குட்டிகளை மந்திரிகளாக்கிய படலம் (2256 -2273 )

2256 தந்தை தாய் இழந்து அலமரு குருளையத் தாயாய்
வந்து நாயகன் முலை கொடுத்து அருளிய வகையீது
அந்த வாறு இரு மைந்தரு மந்திரர் ஆகி
எந்தையார் சிவபுரம் புகுந்து இருந்தவாறு இசைப்பாம். 1

2257 ஆதி நாயகன் திரு உரு மறைந்தபின் அனைய
கோது இல் ஆறு இரண்டு ஏனம் ஆக் குமரரும் காலைச்
சோதி ஆறு இரண்டு அருக்கர் போல் தோன்றி அப் பொருப்பில்
ஓதி ஆய்ந்த பல் கலைஞராய் ஒருங்கு வீற்று இருந்தார். 2

2258 அனையராய் அவர் வைகு நாள் அறைபுனல் கூடல்
புனித நாயகன் அருள் திறம் உயிர்க்கு எலாம் பொதுவாய்
இனிய ஆவன என்பதை யாவரும் தேற
வனிதை பால் மொழி மங்கைதன் மணாளனை வினவும். 3

2259 வெவ் விலங்கினும் வெய்யவாய் அசேதன விலங்காம்
இவ் விலங்கே இற்றேம் என குருளைகட்கு இரங்கிக்
கை விலங்கினை எய்த நீ கருணையாய் முலை தந்து
இவ்விலங்கு அறிவகற்றியது யாது என இறைவன். 4

2260 அகில வேதமும் ஆகம பேதமும் நம்மைச்
சகல சிவ தயாபரன் என்று உரை சால்பால்
இகலில் சேதன அசேதனம் ஆகிய இரண்டும்
புகலில் வேறு அல எமக்கு அவை பொதுமைய அதனால். 5

2261 தாய் இழந்து வெம் பசித்து அழல் அகம் சுடத் தழன்று
காயும் மா தபம் புறம் சுடக் கான் இடைக் கிடந்து
தீயும் ஏனம் மென் குருளைக்கு தெருமர இரங்கி
ஆயும் ஆய் முலை அளித்து உயிர் அளித்தனம் அதனால். 6

2262 அளவு இல் ஆற்றலும் திறனும் நல் அரும் பெறல் கல்வி
விளைவும் ஞானமும் கிடைத்தனர் மீனவற்கு இனிமேல்
வளைவு இலாத கோல் அமைச்சராய் வளம் பல பெருக்கிக்
களைவு இல் பாசம் நீத்து எம்பெரும் கணத்தவர் ஆவார். 7

2263 என்று நாயகன் நாயகிக்கு இறை கொடுத்து இயம்பி
அன்று மீனவன் கனவில் வந்து அரச கேள் பன்றிக்
குன்றில் ஏன மா முகத்தராய்ப் பன்னிரு குமரர்

வென்றி வீரராய் வைகுநர் மிக்க அறிவுடையார். 8

2264 அவரை நின் கடைக் அமைச்சராக் கோடி என்ற அளவில்
சிவ பரம் சுடர் அருள் செயச் செழியர் கோ வேந்தன்
கவலரும் களிப்பு உடையனாய்க் கண் மலர்ந்து எழுமான்
தவழ் நெடும் திரைக் கரும் கடல் தத்தி நீந்து எல்லை. 9

2265 மாண்ட கேள்வி சால் மந்திரர்க்கு உணர்த்தி அம் மலை மேல்
காண்ட ஏனமா வீரரைக் கொணர்க எனக் கருணை
பூண்ட காவலன் அமைச்சரும் போய் அவர்க் கண்டு
வேண்ட வீரரும் ஈண்டினார் மீனவன் திருமுன். 10

2266 வந்து இறைஞ்சிய வராக மா மைந்தரை நேர் கண்டு
அந்தம் இல் களிப்பு அடைந்து வேந்து அமைச்சியல் கிழமை
தந்து வேறு பல் வரிசையும் தக்க வா நல்கிக்
கந்து சீறிய கடகரிக் கைதவன் பின்னர். 11

2267 பழைய மந்திரக் கிழார் மடப்பாவை போல் வாரை
விழவு சால் கடி மங்கலம் விதியினால் புணர்த்தி
அழகு இதாம் என நடத்தினான் அனையரும் வீரக்
கழலினாற்கு ஒரு கவயமும் கண்ணுமாய் நடப்பார். 12

2268 உடம்பு ஆறு இரண்டில் உயிர் ஒன்று என ஒன்றி இயைவாய்
விடம்பாய் அரவும் விழுங்கும் இரை ஒத்து நெஞ்சம்
திடம் பாடு கொள்ள வினை வாங்கிச் செழியன் கல்வி
இடம் பாடு நல்கும் பயன் போல் மகிழ்வு எய்த நின்றார். 13

2269 நல் ஆவின் பாலில் நறும் தேன் கலந்து என்னப் பல் நூல்
வல் ஆரும் ஆகி மதி நுட் பரும் ஆகிச் சோர்வில்
சொல்லால் அடையார் மனமும் களிதூங்கச் சொல்லிப்
பல்லார் பிறர் சொல் பயன் ஆய்ந்து கவர வல்லார். 14

2270 பழை யேம் இறையுள் கொளப்பட்டம் என்று ஏமாப்பு எய்தார்
உழை யேவல் செய்யும் சிறார் போல ஒதுங்கி வேந்தன்
விழைவு ஏது அதனை விடம் போல் வெறுத்து வெஃகார்
அழல் போல் அணுகார் அகலார் நிழல் அன்ன நீரார். 15

2271 மறுக்கும் செயல் நீத்து நடக்கையின் வையத் தோரை
ஒறுக்கும் பொருளும் பணி கேட்கையின் ஒன்னலாரைச்
செறுக்கும் பொருளும் கவரார் விளை செல்வ மாக்கள்
இறுக்கும் பொருளே இறைவற்கு இவர் ஈட்டும் செல்வம். 16

2272 மறத் தாம வேலான் மனக் கொள்கை தன் நெஞ்சு மள் வான
நிறத்தாடி நீழல் எனத் தோற்றம் நிறுத்து மற்ற

அறத்து ஆறு எனில் ஆற்று வார் அன்று எனில் ஆக்கம் ஆவி
இறத்தான் வரினு மனத்தானும் இழைக்க ஒண்ணார். 17

2273 இன்னவாறு ஒழுகும் பன்னிரு வோரும்
ஈகையும் தருமமும் புகழும்
தென்னர் கோ மகற்கு வைகலும் பெருகத் திசை
எலாம் விசயம் உண்டாக்கிப்
பன்னக ஆபரணன் சிவபுரம் அடைந்து
பரன் கண நாதருள் கலந்து
மன்னி வீற்று இருந்தார் மன்னர் மன்னவனும்
வான் பதம் அடைந்து வீற்று இருந்தான். 18

பன்றிக் குட்டிகளை மந்திரிகளாக்கிய படலம் சுபம் ------
-------------

## 47. கரிக் குருவிக்கு உபதேசம் செய்த படலம் (2274 -2296 )

2274 வரிக்கு உருகிப் பத்திரற்குப் பலகை இட்ட மணி கண்டன்
அரிக்குருளை வடிவான அடல் வீரர்க் அரசன்பார்
பரிக்கும் அமைச் சியல் அளித்த பரிசு உரைத்தாம் பசுபதி யாற்
கரிக்குருவி குரு மொழி கேட்டு அருள் அடைந்த கதை பகர் வாம். 1

2275 மன்னவன் இராச ராசன் வானவர்க்கு அரசன் ஆன
பின்னவன் குமரன் ஆன பெருவலி மடங்கல் அன்னான்
துன்னலர் அடுபோர் சாய்க்கும் சுகுண பாண்டியன் நீர் ஞாலம்
இன்னல் தீர்த்து அறக் கோல் ஓச்சி ஈரங் குடை நிழற்றும் நாளில்.
2276 ஆற்றல் சால் ஒருவன் மேல் நாள் ஆற்றவும் அறனே ஆற்றி
மாற்றம் இல் சிறிது பாவம் செய்த தன் வலத்தால் வந்து
தேற்றம் இல் கயவாய் ஆகிச் செனித்தலால் காகம் ஆதி
கூற்று என ஊற்றம் செய்யக் குருதி சோர் தலையது ஆகி. 3

2277 புட்கு எல்லாம் எளிதா ஊறு பாடு அஞ்சிப் புரத்துள் வைகி
உட்கி நீள் வனத்துள் போகி வழி மருங்கு ஒரு சார் நிற்கும்
கட்கு அவிழ்ந்து ஒழுகப் பூத்த கவிழ் இணர் மரம் மேல் வைகி
வெட்கம் மீதூரச் சாம்பி வெய்து உயிர்த்து இருக்கும் எல்லை. 4

2278 விடையவன் நீறு பூசும் மெய்யவன் பூண்ட கண்டித்
தொடையவன் புறம்பும் உள்ளும் தூயவன் குடையும் கையில்
உடையவன் தரும தீர்த்த யாத்திரை ஒழுக்கம் பூண்ட
நடையவன் ஒருவன் அந்த நறும் தரு நிழலில் சார்ந்தான். 5

2279 இருந்தவன் சிலரை நோக்கி இயம்புவான் எர்க்கும் பேறு
தரும் தலம் தீர்த்தம் மூர்த்தித் தன்மையில் சிறந்த அன்பு
அரும் தமிழ் மதுரை பொன் தாமரைத் தடம் சுந்தரேசப்

பெரும் தகை என்று சான்றோர் பேசுவார் ஆதலாலே. 6

2280 ஓர் இடத்து இனைய மூன்று விழுப்பமும் உள்ளது ஆகப்
பார் இடத்து இல்லை ஏனை பதி இடத்து ஒன்றே என்றும்
சிர் உடைத்து ஆகும் கூடல் செழும் நகர் இடத்தும் மூன்றும்
பேர் உடைத்து ஆகும் என்றால் பிறிது ஒரு பதி யாது என்றான். 7

2281 இம் மது ரேசன் சேவித்து ஏத்து வோர்க்கு எளியன் ஆகிக்
கைம் மலர் நெல்லி போலக் கருதிய வரங்கள் எல்லாம்
இம்மையின் உடனே நல்கும் ஏனைய தலத்து வானோர்
அம் மையின் அன்றி நல்கார் ஆதலால் அதிகன் என்றான். 8

2282 மற்று அது கேட்டுக் கொம்பர் வைகிய கயவாய் ஞானம்
பெற்றது பறவை ஆகிப் பிறந்ததும் பிறவும் தேற்றம்
உற்றது நாம் இச் சன்மம் ஒழிப்பதற்கு அறவோன் இங்ஙன்
சொற்றதே உறுதி என்று துணிவு கொண்டு எழுந்தது அன்றே. 9

2283 ஆய் மலர்க் கான நீங்கி ஆடக மாடக் கூடல்
போய் மலர்க் கனக கஞ்சப் புண்ணியப் புனல் தோய்ந்து ஆம்பல்
வாய் மலர்க் கயல் உண் கண்ணாள் மணாளனை வலம் செய்து அன்பில்
தோய் மலர் கழல் இனானை அகத்தினால் தொழுது அர்ச்சித்தே. 10

2284 இன்னணம் மூன்று வைகல் கழிந்தபின் எம்பிராட்டி
தன் அமர் காதலானைத் தாழ்ந்து எதிர் நோக்கி ஐய
என்னைக் இக் கயவாய் செய்யும் செயல் இதன் வரவு யாது என்ன
முன்னவன் அதன் தன் செய்தி வரவு எலாம் முறையால் கூறா. 12

2285 பத்திமை நியமம் பூண்ட பறவை மேல் கருணை நாட்டம்
வைத்து இமையாத முக்கண் மறை முதல் ஒரு சேய்க் கன்று
நித்திய நிலைமை நல்கி நேர்ந்த வெம் கூற்றைக் காய்ந்த
சத்திய ஞான மிருத்திஞ்சயத்தினை உபதேசித்தான். 13

2286 உவமை அற்றவன் உரைத்த மந்திரம்
செவி மடுத்தலும் சிற்றுணர்ச்சிபோய்ப்
பவம் அகற்றிடப் படுக் கரிக் குரீஇ
கவலை விட்டரன் கழல் வழுத்தும் ஆல். 14

2287 எண் இலா உயிர்க்கு இறைவ போற்றி வான்
தண் நிலா மதிச் சடில போற்றி என்
புண்ணியப் பயன் போற்றி அம் கயல்
கண்ணி நாத நின் கருணை போற்றி ஆல். 15

2288 தௌ◌தல் இன்றியே செய்த தீமையால்
விளியும் என்னையும் ஆளல் வேண்டுமோ

எளியர் எங்கு உளார் என்று தேர்ந்து தேர்ந்து
அளியை ஆவது உன் அருளின் வண்ணமே. 16

2289 உம்மை நல் அறம் உடைய நீர்மையால்
இம்மை இம் மனு இயம்பினாய் இது
அம்மை நல் நெறிக்கு ஏது ஆதலான்
மும்மையும் நலம் உடைய மொய்ம்பினேன். 17

2290 ஆயினும் எனக்கு ஐய ஓர் குறை
தீய புள் எலாம் ஊறு செய்து எனைக்
காயும் மனமும் கழியக் கண்ட பேர்
ஏ எனும் படிக்கு எளியன் ஆயினேன். 18

2291 என்ன அக் குரீ இயம்ப எம்பிரான்
அன்ன புட்கு எலாம் வலியை ஆகெனப்
பின்னும் அக் குரீஇ தாழ்ந்து பேதை யேற்கு
இன்னும் ஓர் வரந் தருதி என்றதால். 19

2292 வலியை என்பது என் மரபினுக்கு எலாம்
பொலிய வேண்டும் எப்போதும் நீ சொன
ஒலிய மந்திரம் ஓதி ஓதி நாங்
கலியை வெல்லவும் கருணை செய்கென. 20

2293 ஆவது ஆக என்று அமரர் நாயகன்
மூ எழுத்தினான் முடிந்த அம்மனு
தாவி தெய்வதம் இருடி சந்தமோடு
ஓவில் ஓசை மூன்று ஒடு தெருட்டினான். 21

2294 குரு மொழி பயின்று முள் வாய்க் குருவி தன் குலனும் தன் போல்
அரு மறை முதல்வன் ஈந்த ஆற்றலால் பறவைக்கு எல்லாம்
பெருமை சால் வலியான் என்னும் பெயரவாய் உலகின் மன்னக்
கருமணி கண்டன் செம்பொன் கனை கழல் அடி சேர்ந்த அன்றே. 22

2295 இக்கரிக் குருவி தான் நோற்று எய்திய வரத்தைத் தன் போல்
ஒக்கலும் எளிதாய் எய்தப் பெற்றதால் உலகின் மேன்மை
தக்கன் ஒருவன் வாழத் தன் கிளை வாழ்வது என்ன
மிக்கவர் எடுத்துக் கூறும் பழமொழி விளக்கிற்று அன்றே. 23

2296 ஈசன் அடிக்கு அன்பு இல்லார் போல் எளியார் இல்லை யாவர்க்கும்
ஈசன் அடிக்கு அன்பு உடையார் போல் வலியார் இல்லை யாவர்க்கும்
ஈசன் அடிக்கு அன்பு இன்மையினால் எளிதாய் திரிந்த இக் கயவாய்
ஈசன் அடிக்கு அன்பு உடைமையினால் வலிது ஆயிற்றே எவ்வுயிர்க்கும். 24

கரிக் குருவிக்கு உபதேசம் செய்த படலம் சுபம்

## **48.** நாரைக்கு முத்தி கொடுத்த படலம் **(2297 -2321 )**

2297 அத்தி தந்த விமான அழகியார்
பத்தி தந்த பறவைக்கு மந்திர
சித்தி தந்த திறன் இது நாரைக்கு
முத்தி தந்த கருணை மொழிகுவாம். 1

2298 தேக்கு நீர் வைகை நாட்டு ஒரு தென் புலத்து
ஆக்கும் மாடவை வைப்பு ஒன்று உள அவ்வயின்
வீக்கு யாழ் செயும் வண்டுக்கு வீழ் நறவு
ஆக்கு தாமரை வாவி ஒன்று உள்ளது ஆல். 2

2299 ஆழம் மிக்க கயம் தலை அத்தலை
வாழும் மீனம் அனைத்தையும் வாய்ப் பெய்து
சூழநந்து முத்து ஈனும் துறைக் கணே
தாழ்வதோர் செய்ய தாள் மட நாரையே. 3

2300 சிறிய நாள் மழை இன்றி அச்சே இதழ்
வெறிய தாமரை ஓடை வியன் கரை
இறை கொள் நாரை இருவினைப் பௌவமும்
வறியது ஆகி வறப்ப வறந்தது ஆல். 4

2301 நுரை செறித்து அன்ன நோன் சிறை நாரையும்
இரை விரும்பி அவ்வாவி இகந்து ஒரீஇ
விரைவந்து ஒரு கான் இடை வீழ்ந்ததால்
புரையிலோர்க்கு இடன் ஆகும் அப் பொங்கர் வாய். 5

2302 முத்தர் ஆன முனிவர் குழாத் தொடும்
சுத்த ஆனந்த வாரியுள் தோய்ந்து தன்
சித்த மாசு கழீச் சிவம் ஆகிய
சத்தியத் தவ மா முனி தங்கும் ஆல். 6

2303 கூப்பிட்டு எல்லைக் குணித்துச் சதுர மா
யாப்ப மைந்து சுற்று எங்கும் படித்துறைக்
கோப்பு அமைந்து குளிர் சந்தி யாம் மடம்
காப்ப அமைந்து ஓர் கயம் தலை உள்ளது ஆல். 7

2304 விரை செய் சண்பகம் பாதிரி வேங்கை தேன்
இரை செய் வஞ்சி இலஞ்சி குரா மரா
நிரை செய் கிஞ்சுக நீள் மருது ஆதியா
உரை செய் பன் மரமும் புறத்து உள்ள ஆல். 8

2305 அந்த வாவியின் பேர் அச்சோ தீர்த்தம் என்று

இந்த ஞாலம் இயம்புவதால் இரை
உந்த வாவு கொடு ஊக்க எழுந்து முன்
வந்த நாரை அதன் கரை வைகும் ஆல். 9

2306 ஆய்ந்த மாதவர் அப்புனிதத் தடம்
தோய்ந்து தோய்ந்து அங்கு எழும் தொறும் தோள் புறம்
சாய்ந்த வார் சடைக் கற்றையில் தத்து மீன்
பாய்ந்து பாய்ந்து புரள்வன பார்த்தரோ. 10

2307 ஈண்டை இத் தவத்தோர் திரு மேனியைத்
தண்ட எத்தவம் செய்தனவே கொல் என்று
ஆண்டை மீன் நம்கு ஆகா என விரை
வேண்டு நாரை வெறுத்து அங்கு இறுத்தலால். 11

2308 தன் நிகர் தவத்தோர் யாரும் தடம் படிந்து ஏறி நித்த
மன்னிய கருமம் முற்றிச் சந்தியா மடத்தில் வைகி
மின்னிய மகுடம் சூடி வேந்தனாய் உலகம் காத்த
பொன்னியல் சடையான் கூடல் புராண நூல் ஒதுகின்றார். 12

2309 அண்ணல் எம் பெருமான் செய்த அருள் விளையாட்டும் ஆதிப்
பண்ணவன் சிறப்பும் கூடல் பழம் பதிச் சிறப்பும் தீர்த்தத்
தெண்ணரும் சிறப்பும் சேர்ந்தோர்க்கு எளிவரும் இறைவன் என்னும்
வண்ணமும் எடுத்துக் கூறக் கேட்டு அங்கு வதியும் நாரை. 13

2310 மடம்படு அறிவும் நீங்கி வல்வினைப் பாசம் வீசித்
திடம்படு அறிவு கூர்ந்து சிவ பரஞ்சோதி பாதத்து
திடம்படு அன்பு வா என்று ஈர்த்து எழ எழுந்து நாரை
தடம் படு மாடக் கூடல் தனி நகர் அடைந்து மாதோ. 14

2311 வாங்கிய திரை சூழ் பொற்றா மரை படிந்து இமையா வேழந்
தாங்கிய விமான மேய தலை வனைத் தாழ்ந்து சூழ்ந்து
தேங்கிய அருள் கண் நோக்கத் தெரிசித்துத் திருமுன் வைகி
ஓங்கிய கருணை மேனி உள்ளூறத் தியானம் செய்து. 15

2312 இந் நிலை நியமம் மூ ஐந்து எல்லை ஞான்று இயன்று பின் நாள்
அந் நிலை ஒழுகு நாரை ஆடக கமலம் தோய்வான்
வன் நிலை மதில் சூழ் ஞாங்கர் வந்துழிப் பசியால் வெந்து
மின் நிலை வேல் போல் துள்ளும் மீன் கவர்ந்து உண்கும் என்னா. 16

2313 சிறிது உளத்து உள்ளி நாதன் திருவருள் வலத்தால் பின்னர்
அறிவு வந்து அச்சோ இந்த அறப் பெரும் தீர்த்தத்து உள்ளே
எறியும் மீன் அருந்த ஆசை எழுந்ததே எனக்கு இப்போதிப்
பிறவி என்று ஒழிவது என்னாப் பேர் அஞர் அடைந்து பின்னும். 17

2314 சுந்தரச் செம்மல் பாதத் துணை மலர் அன்பில் தோய்ந்து
சிந்தை வைத்து இருக்கும் எல்லை தேவரும் மறையும் செய்யும்
வந்தனைக்கு அரியா னாரை மன நினை வடிவாய்த் தோன்றி
எம் தமக்கு இனியாய் வேண்டும் வரம் என் கொல் இயம்புக என்றான். 18

2315 செய்ய கால் மட நாரையும் சென்று தாழ்ந்து
ஐயனே இப் பிறவி அறுத்து நின்
மெய்யர் வாழ் சிவ லோகத்தின் மேவி நான்
உய்ய வேண்டும் ஒன்று இன்னமும் உண்டு அரோ. 19

2316 மடம்படு அறிவும் நீங்கி வல்வினைப் பாசம் வீசித்
திடம்படு அறிவு கூர்ந்து சிவ பரஞ்சோதி பாதத்து
திடம்படு அன்பு வா என்று ஈர்த்து எழ எழுந்து நாரை
தடம் படு மாடக் கூடல் தனி நகர் அடைந்து மாதோ. 20

2317 என்று இத் தட மின் இலவாக நீ
நன்று சால் வர நல் கென வெள்ளி மா
மன்று உளானும் வரம் தந்து போயினான்
சென்று நாரை சிவலோகம் சேர்ந்தது ஆல். 21

2318 இயங்கள் ஐந்தும் இயம்ப விமான மேல்
புயங்க கணான்குமுக் கண்களும் பொற்ப வான்
வியம் கொள் பூ மழை வெள்ளத்துள் ஆழ்ந்து போய்
வயம் கொள் நந்தி கணத்துள் வதிந்ததே. 22

2319 அன்று தொட்டு இன்று அளவும் பொன் தாமரை
என்று உரைக்கும் எழில் மலர் ஓடையில்
சென்று உகைத்துத் திரிகின்ற மீன் அலால்
ஒன்று மற்றன நீர் வாழ் உயிர்களும். 23

2320 தன் கிளை அன்றி வேற்றுப் பறவைகள் தாமும் தன் போல்
நன் கதி அடைய வேண்டிற்றே கொல் இந் நாரை செய்த
அன்பினில் வியப்போ ஈசன் அருளினில் வியப்போ அன்பர்க்கு
இன்பு உருவான ஈசன் அன்பருக்கு எளிதே ஐய. 24

2321 மறக் குறும்புக் களைக் கட்டு மண்ணின் மேல்
அறப் பெரும் பயிர் ஆக்கி அதன் பயன்
சிறக்க நல்கிட உண்டு செருக்கு வான்
துறத்தம் எய்தி இருந்தான் சுகுணனும். 25

நாரைக்கு முத்தி கொடுத்த படலம் சுபம்

----------------